PRGI No.TNTAM/25/A4806




JIO NEWS தமிழ்

jionewstamil.com , JIO NEWSTAMIL மாதம் இருமுறை இதழ்

Volume: 01 | Issue: 07 | 2026, June 01-15 | Rs. 20/-






## பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ (POCSO) வழக்குகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை கூட்டம்

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ (POCSO) வழக்குகளைத் திறம்பட விசாரித்து, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தருவதை உறுதி செய்யும் வகையிலான சிறப்புக் கலந்தாய்வு மற்றும் பயிற்சி வகுப்பு இன்று மாவட்ட காவல் அலுவலகத்தில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.B.k.அரவிந்த் இ.கா.ப அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்களிடம் கனிவான அணுகுமுறையைக் கையாளுதல் (Victim-friendly approach), புகார்கள் மீது தாமதமின்றி உடனடியாக வழக்குப் பதிவு செய்தல் மற்றும் புலனாய்வு நுணுக்கங்கள் குறித்து பெண் காவலர்களுக்கு உரிய விழிப்புணர்வும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதில் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் மற்றும் தலைமை காவலர்கள் உள்ளிட்ட பல காவலர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.




# தடை விலகியது!

முதல்வர் ஜோசப் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் சட்டப்பேரவையில் தனது பெரும்பான்மையை நிரூபித்திருப்பதைத் தொடர்ந்து ஒட்டுமொத்த தமிழகமும் ஆறுதல் பெருமூச்சு விடுகிறது. அதிமுகவில் பிளவு என்பது விமர்சிக்கப்பட்டாலும்கூட உதிரிக் கட்சிகளின் தயவில் "நித்திய கண்டம் பூரண ஆயுசாக' தொடர வேண்டிய தர்மசங்கடத்திலிருந்து ஆட்சி காப்பாற்றப்பட்டிருக்கிறது.

சட்டப்பேரவையில் முதல்வரின் நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்கள் "ஆதரவு' என்கிற பெயரில் முதல்வருக்கும் ஆட்சிக்கும் ஏற்படுத்தும் தர்மசங்கடங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த தர்மசங்கடங்களேகூட ஆட்சிக்கு வலு சேர்ப்பதாகவே அமையக்கூடும்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிரான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க எதிர்க்கட்சியான திமுகவும், ஆட்சிக்கு ஆதரவு அளிக்கும் திமுகவின் சில கூட்டணிக் கட்சிகளும் நிர்ப்பந்தித்திருக்கின்றன. அதை முதல்வர் ஜோசப் விஜய் எப்படி கையாளப் போகிறார் என்பதில்தான் அவரது வெற்றி வியூகம் கட்டமைக்கப்படும்.

திமுகவுடனான உறவை முறித்துக்கொண்டு காங்கிரஸ் ஆதரவு அளித்திருக்கிறது. திமுகவும் அதன் கூட்டணிக் கட்சியான தேமுதிகவும் வெளிநடப்புச் செய்திருக்கின்றன; அதிமுகவின் கூட்டணிக் கட்சியான பாஜகவும், பாமகவும் நடுநிலை வகித்திருக்கின்றன.

திமுக கூட்டணியில் இப்போதும் தொடர்வதாகக் கூறிக்கொள்ளும் இடதுசாரிக் கட்சிகள் (4), விடுதலைச் சிறுத்தைக் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2), ஆகியவற்றுடன் அதிமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த அமமுகவின் ஒற்றை உறுப்பினர், தவெக ஆட்சி தொடர்வதற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்திருக்கிறார்கள். அதிமுகவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 உறுப்பினர்கள் கட்சிக் கொறடாவின் வழிகாட்டுதலை மீறி ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

குதிரை பேரம் நடந்திருக்கிறது என்கிற குற்றச்சாட்டு எதிர்க்கட்சிகளான திமுக, அதிமுக, தேமுதிக, அமமுக ஆகியவற்றால் முன்வைக்கப்படுகிறது. அப்படி குதிரை பேரம் நடந்திருந்தால், தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மை வழங்காத வாக்காளர்கள்தான் குற்றவாளிகள். ஆட்சி அமைக்க இயலாமல் மீண்டும் தேர்தலுக்கு வழிகோலியிருந்தால், தவெகவை வாக்காளர்கள் மன்னித்திருக்க மாட்டார்கள்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதில் இருந்து நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது வரையிலான காலகட்டத்தில் முதல்வர் ஜோசப் விஜய்யின் அணுகுமுறையும், செயல்பாடுகளும், தமிழகத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கும் வழக்கங்களிலிருந்து மாறுபடுகிறது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இறை மறுப்புக் கொள்கையைப் புறந்தள்ளி ஆண்டவன் பெயரில் உறுதிமொழி எடுத்துக் கொண்டதும்; கரை வேஷ்டி கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து கோட்டும் சூட்டுமாக மேடை ஏறியதும் மாற்று அணுகுமுறையின் வெளிப்பாடு.

அதிமுகவின் அதிருப்தி அணியினரைச் சந்தித்து விட்டு, முன்னாள் முதல்வரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமியை சந்திக்காமல் தவிர்த்தது, ஒரு வகையில் சந்தர்ப்பவாதம்தான் என்பதை மறுப்பதற்கில்லை. தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் நிலையில், வலிய வரும் ஆதரவை இழப்பது புத்திசாலித்தனமல்ல என்பதை நாம் உணர வேண்டும். மாற்று அரசு அமைப்பதில் முனைப்புக் காட்டாமல், ஆரம்பத்திலேயே தவெக அரசுக்கு அதிமுக ஆதரவுக்கரம் நீட்டியிருந்தால், இதற்கான வாய்ப்பு தவிர்க்கப்பட்டிருக்கும்.

முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலினில் தொடங்கி, தேர்தலில் எதிர்த்துக் களமாடி சட்டப்பேரவையில் ஒரே ஒரு இடம்கூடப் பெற முடியாத நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வரை, எல்லா தலைவர்களையும் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றது தமிழக அரசியலில் புது வசந்தம் வீசத் தொடங்கி இருப்பதன் தொடக்கம். முதல்வர் ஜோசப் விஜய் தொடங்கி வைத்திருக்கும் இந்த நாகரிகம், நிரந்தரமாகத் தொடர வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பமும்கூட.

**ஆசிரியர்**

# விவசாயக் கடன் தள்ளுபடி..
# பொய் சொல்லி ஏமாற்ற மாட்டேன்!
## விவசாயிகளே கவலைப்படாதீங்க.. விஜய் உத்தரவாதம்



தமிழக முதல்வர் விஜய் கூட்டுறவு வங்கிகளில் இருந்து ரூ.50,000 வரை மட்டுமே பயிர்க்கடன் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது கவலை அளிப்பதாகவும், தேர்தலுக்கு முன்பு அளித்த விவசாயக் கடன் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றக் கோரியும் விவசாயிகள் தெரிவித்த நிலையில் விஜய் இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் அறிவிச்சோம். அதில் ஏற்கனவே இருந்த 100 யூனிட் இலவசம் என்பது திமுக கொடுத்தது இல்லை.. அது மேடம், ஜெயலலிதா கொண்டு வந்த திட்டம். பதவி போன அந்த கடுப்பில் ஸ்டாலின் சார் ஒரே அறிக்கையாக அடித்து விடுகிறார். நீங்க என்ன செஞ்சீங்க உங்க ஆட்சியில.. மக்கள் பணத்தை, டாஸ்மாக்கில் கொள்ளையடித்த அந்த பணத்தை ஊழல் செய்த அந்த ஃபைலை க்ளோஸ் பண்றதுக்கு அழையா அழைந்தீர்கள். ஆனால் நாங்க இந்த விஜய் மக்களுக்கு தொந்தரவாக இருக்கின்ற அந்த டாஸ்மாக் கடைகளை குளோஸ் பண்ணினான்.

விவசாய கடன் தள்ளுபடி செய்தோம். இந்த ஒரு மாதத்தில் என்ன பண்ண முடியுமோ அதனைத் தான் செய்திருக்கிறோம். நீங்க தான் நிதி சம்பந்தமாக இருக்கின்ற எல்லா கேட்டையும் லாக் பண்ணி வச்சுட்டு போயிருக்கீங்களே.. அதை எல்லாம் சரி செய்ய வேண்டாமா.. ஒழுங்குப் படுத்த வேண்டாமா? அதனால் நான் மறுபடியும் சொல்றேன். இந்த விஜய் பொய் சொல்லி ஏமாற்றுவதற்கு அரசியலுக்கு வரவில்லை. உங்க கூடவே நின்று வேலை செய்யத் தான் அரசியலுக்கு வந்திருக்கிறேன்.. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. கவலையேப் படாதீங்க விவசாய மக்களே..

இந்த திமுகவும் மற்றும் பலரும் ஒன்னா சேர்ந்துக்கிட்டு விஜய் ஆட்சி அமைத்துவிட கூடாது என்று சொல்லி ஒரு கூத்து ஒன்னு பண்ணாங்களே.. அந்த 5 நாட்கள் இருக்கே.. அட அடா.. நமக்குல்லாம், ஆஹா.. இப்படி எல்லாம் கூட நடக்குமோ என்ன என்ன தோன்றியது.. என்னா கூத்து.. பியூச்சர் என்னவா இருக்கும் என்று சொல்கிறேன்.. உண்மையாக மக்களுக்காக உழைத்த விஜய்யா.. இல்லை.. இந்த விஜய்யோட ஆட்சி அமைந்துவிட கூடாது என நினைத்த ஸ்டாலின் சாரா.. அவ்வளவு தான். இதற்கு நடுவில்ரெண்டு பேருக்கு மட்டும் தான் போட்டி..

அவங்க தான் ஆட்சியிலேயே இல்லையே அவர்களை ஏன் விமர்சிக்குறீங்க, ஏன் குறை சொல்கிறீர்கள் என்று சொல்கிறார்கள்.. வேரில் வெந்நீரை ஊற்றிவிட்டு சென்றவர்களை வெளிச்சம் போட்டு காட்டாமல்.. பின்ன வேற என்ன சொல்வாங்க.. இதெல்லாம் மக்களிடம் தெளிவாக சொல்ல வேண்டும் அல்லவா?" என்று பேசினார்.

தமிழக முதல்வர் விஜய் கடந்த வாரம், "கூட்டுறவு வங்கிகளில் இருந்து ரூ.50,000 வரை பயிர்க்கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அதிரடியாக அறிவித்தார். இந்தத் கடன் தள்ளுபடி திட்டம் 1 மே 2025 முதல் 28 பிப்ரவரி 2026 வரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், மற்றவர்களுக்கு இது பொருந்தாது என்றும் அறிவித்து இருந்தார். மேலும் இந்த திட்டமானது, கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு

மட்டும் பொருந்தும். தேசியமயமாக்கப்பட்ட அல்லது தனியார் வங்கிகளில் பெற்ற கடன்களுக்கு இது பொருந்தாது என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதே சமயம் விஜய் தேர்தல் வாக்குறுதியின் போது அனைத்து விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என கூறியிருந்தார். ஆனால் இப்போது "கூட்டுறவு வங்கிகளில் இருந்து ரூ.50,000 வரை மட்டுமே பயிர்க்கடன் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது" கவலை அளிப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்து இருந்தனர். பல்வேறு இடங்களில் போராட்டங்களிலும் ஈடுபட்டு இருந்தனர். இந்த நிலையில் தான் இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் விஜய் பேசியுள்ளார்.



## மதசார்பற்ற கொள்கை.. மாநில உரிமைகளில் சமரசமே கிடையாது..



தவெக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் இன்று திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்க மக்கள் சந்திப்பு கூட்டத்தை நடத்தினார். விஜய் முதல்வராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக பொதுவெளியில் பங்கேற்ற நிகழ்ச்சி என்பதால், விஜய் என்ன பேசப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே நிலவியது. எதிர்பார்ப்புக்கு ஏற்ப விஜய் சரவெடியாக வெடித்தார்.

ஆனால் தேர்தல் முடிந்த பிறகும் பிரசார பாணியிலேயே விஜய்யின் இன்றைய பேச்சு இருந்தது. விஜய் தனது பேச்சில் வழக்கம் போல திமுகவை கடுமையாக அட்டாக் செய்து பேசினார். அதேபோல, தனது மதசார்பற்ற கொள்கையிலும், மாநில சுயாட்சியிலும் உறுதியாக நிற்பேன் என்று கூறினார். விஜய் கூறியதாவது:

தனிப்பெரும்பான்மை பெற்று இருந்தாலும் நம்மை நம்பி முறையாக கூட்டணியில் ஆதரிக்க வர்றவங்களை ஆதரித்தே இருப்போம். தவெக ஆட்சி எந்த பாகுபாடும் இல்லாமல் எல்லாருக்குமான ஆட்சியாகத்தான் இருக்கும். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஸ்டாலின் மாதிரி ஊசலாட்டம் இருக்காது. மதச்சார்பற்ற கொள்கையில் சமரசமே கிடையாது. மாநில உரிமைகளை விட்டு கொடுக்கவே மாட்டோம்.

நதி நீர் உரிமைகளை விட்டு கொடுக்கவே மாட்டோம். சமூக நீதி, சமத்துவ நீதியை ஒருநாளும் விட்டு கொடுக்க மாட்டோம். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய 234 தொகுதியும் நம்ம தொகுதிதான். அதில் எந்த கட்சி ஜெயிச்சிருந்தாலும் அது நம்ம தொகுதிதான். பெரம்பூராக இருக்கட்டும், திருச்சி கிழக்காக இருக்கட்டும் எனக்கு இரண்டு கண்கள் மாதிரி.. அதிலும் திருச்சி கிழக்கு என் செல்லப்பிள்ளை மாதிரி.. அதனால் வரப்போற இடைத்தேர்தலில் உங்க வீட்டில் இருக்கும் ஒருவரை உங்களில் ஒருத்தரைத்தான் நிற்க வைக்க போறோம்" என்றார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம் என்று ஒற்றைக்காலில் டிகே சிவக்குமார் உள்ளார். காங்கிரஸ் ஆளும் கட்சியாக கர்நாடகாவில் உள்ள நிலையில், இந்த விவகாரத்தில் விஜய் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை முறியடிக்க வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகளும், விவசாயிகளும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

இந்த சூழலில்தான், நதி நீர் பிரச்சினையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று தனது பேச்சில் கூறியிருப்பது மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடகாவுக்கு விஜய் கொடுத்த மெசேஜ் ஆகவே பார்க்கப்படுகிறது. அதேபோல, தனது கூட்டணி கட்சிகளை திருப்திப்படுத்தும் விதமாக மதசார்பற்ற கொள்கையிலும் ஊசலாட்டம் இன்றி உறுதியாக இருப்பேன் என்று பேசியுள்ளார்.



# மோடி தங்கத்தை தவிர்க்க சொல்வது ஏன்? தங்கத்துக்கும் அந்நிய செலாவணிக்கும் என்ன தொடர்பு?- முழு விவரம்!

இந்தியா உலகின் இரண்டாவது பெரிய தங்கம் வாங்கும் நாடாகும். இதில் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது, மேலும் ஒவ்வொரு அவுன்ஸ் தங்கத்திற்கும் டாலர்களில்தான் பணம் செலுத்தப்படுகிறது.

"ஓராண்டுக்கு தங்கம் வாங்காதீர்கள்; வெளிநாட்டு பயணங்களை தள்ளி வையுங்கள்; முடிந்தவரை வீட்டிலிருந்து வேலை செய்யுங்கள்," என பிரதமர் நரேந்திர மோடி விடுத்துள்ள வேண்டுகோள், நாடு தழுவிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

டாலர்களை சேமித்து, இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்க வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம். ஈரான் போர் பதற்றம், கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் இந்திய ரூபாய் மீதான அழுத்தம் அதிகரித்து வரும் சூழலில், பிரதமரின் இந்த வேண்டுகோள் புதிய விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், தங்கம் வாங்குவதை தவிர்ப்பதற்கும், நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்புக்கும் என்ன சம்பந்தம்? இந்த கேள்விக்கான பதில், சில எளிய கணக்குகளில் மறைந்துள்ளது.

டிரேடிங் எகனாமிக்ஸ் தரவுகளின்படி, இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு சுமார் $690.69 பில்லியன் டாலர்களாக உள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மை அதிகரித்ததால், கடந்த பிப்ரவரியில் $728 பில்லியன் டாலர்களாக உயர்ந்த கையிருப்பு, ஏப்ரலில் மீண்டும் $691 பில்லியனாக சரிந்தது என ரிசர்வ் வங்கி தரவுகள் காட்டுகின்றன.

அதே சமயம், இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (CAD) 2026ஆம் ஆண்டில் $84.5 பில்லியன் டாலராக அதிகரிக்கக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் (IMF) கணித்துள்ளது. நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரிப்பது என்பது, நாட்டிற்குள் வரும் டாலர்களை விட, வெளியே செல்லும் டாலர்களின் அளவு அதிகம் என்பதைக் குறிக்கிறது.

இந்த பற்றாக்குறைக்கு தங்கம் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. 2026 நிதியாண்டில் மட்டும் இந்தியா சுமார் $72 பில்லியன் டாலர் மதிப்புள்ள தங்கத்தை இறக்குமதி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 24 சதவீதம் அதிகமாகும். உண்மையில், இந்தியா உலகின் இரண்டாவது பெரிய தங்கம் வாங்கும் நாடாகும். இதில் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது, மேலும் ஒவ்வொரு அவுன்ஸ் தங்கத்திற்கும் டாலர்களில்தான் பணம் செலுத்தப்படுகிறது.





## இறக்குமதியின் முழு விவரம்:

FY26 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த இறக்குமதி மதிப்பு $775 பில்லியன் டாலர்கள். இதில் நான்கு முக்கிய பொருட்களின் இறக்குமதி செலவு மட்டும் $240 பில்லியனைத் தாண்டுகிறது.

கச்சா எண்ணெய்: $134.7 பில்லியன்

தங்கம்: $72 பில்லியன்

சமையல் எண்ணெய்: $19.5 பில்லியன்

உரங்கள்: $14.5 பில்லியன்

இந்த நான்கு பொருட்களும் இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 31.1 சதவீதத்தை வகிக்கின்றன. இதில் தங்கம் மட்டும் கிட்டத்தட்ட 10 சதவீதம். இதனால்தான், இந்த பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்குமாறு பிரதமர் மோடி மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியர்கள் ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை கணிசமாகக் குறைத்தால், தங்க இறக்குமதியில் 3040% சரிவு ஏற்பட்டால் கூட, நாட்டின் அந்நிய செலாவணியில் $2025 பில்லியன் டாலர்களை சேமிக்க முடியும். ஒருவேளை 50% சரிவு ஏற்பட்டால், சேமிப்பு $36 பில்லியன் டாலராக இருக்கும். இது, கணிக்கப்பட்டுள்ள நடப்புக் கணக்குப் பற்றாக்குறையில் கிட்டத்தட்ட பாதியாகும். எளிமையாகச் சொன்னால், தங்கம் வாங்காமல் இருப்பது, நாட்டின் டாலர் வெளியேற்றத்தை நேரடியாகக் குறைக்கும்.

கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் $100 டாலருக்கு மேல் விற்கப்படும் சூழலில், இந்தியா தனது எண்ணெய் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதி செய்யும் நிலையில், இந்த சேமிக்கப்படும் டாலர்கள் மிகவும் முக்கியமானவை.

அமெரிக்க, இஸ்ரேல் ஈரான் மோதல் காரணமாக, முக்கிய எண்ணெய் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கச்சா எண்ணெய் விலை உயர்ந்து, ரூபாயின் மதிப்பு சரிந்துள்ளது. இது போன்ற போர்ச் சூழலில், தங்கம் ஒரு "பாதுகாப்பான புகலிடமாக" கருதப்படுகிறது. மக்கள் தங்கத்தை வாங்க முற்படுவதால், அதன் விலை மற்றும் இறக்குமதி அதிகரிக்கிறது. இதனால் டாலர் வெளியேற்றமும் கூடுகிறது.

எனவே, இந்தியா ஒரே நேரத்தில் இரண்டு அழுத்தங்களை எதிர்கொள்கிறது: ஒன்று, அதிக விலையில் எண்ணெய் இறக்குமதி; மற்றொன்று, அதிக விலையில் தங்க இறக்குமதி. ஒவ்வொரு முறை தங்கம் வாங்கப்படும்போதும், இறக்குமதியாளர் சந்தையிலிருந்து டாலரை வாங்குகிறார். இது டாலருக்கான தேவையைக் கூட்டி, ரூபாயை மேலும் பலவீனப்படுத்துகிறது. மாறாக, தங்கம் வாங்குவதை நிறுத்தினால், டாலருக்கான தேவை குறைந்து, ரூபாய் மற்றும் ரிசர்வ் வங்கியின் கையிருப்பு மீதான அழுத்தம் குறையும். "இது ஒரு தற்காப்பு பொருளாதார உத்தி, பீதியடைய வேண்டிய அவசியமில்லை," என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள்.

நிதி ஆலோசகர்கள், `நகைகள் அல்லது தங்கக் கட்டிகளாக வாங்குவதற்குப் பதிலாக, நிதி சார்ந்த தங்க முதலீட்டுத் திட்டங்களுக்கு மாறுமாறு பரிந்துரைக்கிறார்கள். SIP-கள் மற்றும் கோல்டு ETF-கள் (Gold ETFs) மூலம் முதலீடு செய்வதன் மூலம், பணத்தை இந்திய நிதி அமைப்புக்குள்ளேயே வைத்திருக்க முடியும். இது டாலர் வெளியேற்றத்தை ஏற்படுத்தாமல் மூலதனத்தை உற்பத்திக்கு பயன்படுத்த உதவும் என்கிறார்கள்.

பிரதமர் மோடியின் வேண்டுகோள் தங்கம் மட்டுமல்லாது, பொருளாதாரத்தின் மற்ற முக்கிய துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்கும்படி கூறியதால், விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறை பங்குகள் மந்தமடைந்துள்ளன. இதேபோல், எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும்படி விடுத்த கோரிக்கை பெட்ரோலியத் துறை நிறுவனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமையல் எண்ணெய் மற்றும் உரங்களின் இறக்குமதியைக் குறைக்கும் கொள்கை வழிகாட்டுதல்களால், அத்துறைகளிலும் வளர்ச்சி வேகம் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




மதுபோதையில் படுத்துக்கிடந்த சுரேஷிடம் விசாரணை நடத்தியதில், தனது நண்பர் விக்னேஷ்வரன் மூலம் மது அருந்த அழைத்து பிரபாகரனை கழுத்தை அறுத்து கொலை செய்து அங்குள்ள கிணற்றில் வீசியதை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து போலீஸார் சுரேஷைக் கைது செய்தனர்.

இதுகுறித்து போலீஸாரிடம் பேசினோம், “கடந்த செப்டம்பர் மாதம், மகளின் காதல் விவகாரத்தில் தன் மகளுக்கு சகோதரன் உறவு முறையான தமிழரசன் என்பவரை தன் மகன்

# மகளைக் காதலித்த 2 இளைஞர்களை அடுத்தடுத்து கொலை செய்த தந்தை;

சிவகாசியில் மகளைக் காதலித்த உறவுக்கார இளைஞர் ஒருவரைக் கடந்த 9 மாதங்களுக்கு முன்பு கொலை செய்த தந்தை, ஜாமீனில் வந்த நிலையில் மீண்டும் காதல் விவகாரத்தில் மற்றொரு இளைஞரைக் கொலை செய்தது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகிலுள்ள செவலூரைச் சேர்ந்தவர் பிரபாகரன். லாரி டிரைவரான இவர், அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவரின் 17 வயது மகளைக் காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இது குறித்து தெரிந்த சுரேஷ், பிரபாகரனைக் கண்டித்தாராம். ஆனால், பிரபாகரன் தொடர்ந்து அச்சிறுமியிடம் பேசி வந்துள்ளார். இந்த நிலையில், கடந்த 2 நாள்களுக்கு முன்பு மதியம் வீட்டை விட்டு வெளியே வந்த பிரபாகரன் அதன் பின் வீடு திரும்பவில்லை. இந்த நிலையில், பிரபாகரனின் பெற்றோர் எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

போலீஸாரின் விசாரணையில் காதல் விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே பிரபாகரனுக்கும், சுரேஷுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதால் சந்தேகத்தின் அடிப்படையில் சுரேஷைத் தேடினர். கொத்தனேரி பகுதியில் படுத்துக்கிடப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்றனர்.






சங்கரபாண்டி அவரது நண்பர்களுடன் சேர்ந்து அரிவாளால் வெட்டிக் கொலை செய்த வழக்கில் கைதாகி சிறை சென்றார் சுரேஷ். கடந்த 3 மாதத்திற்கு முன்புதான் ஜாமீனில் வெளியில் வந்துள்ளார்.

சிறையிலிருந்தபோது அவருடன் நட்பாகப் பழகிய விக்னேஷ்வரன் என்பவரின் உதவியில்தான் பிரபாகரனைக் கொலை செய்துள்ளார் சுரேஷ். சுரேஷ் மீது 10க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இச்சம்பவத்தில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா என விசாரித்து வருகிறோம். கொலை செய்தவர், கொலை செய்யப்பட்டவர் என அனைவருமே ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள்தான்” என்றனர்.

மகளின் காதலுக்காக அடுத்தடுத்து இரண்டு கொலைச் சம்பவங்களை அரங்கேற்றியுள்ளது சிவகாசியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



# கண்களில் மிளகாய்பொடி தூவி கொலை செய்யப்பட்ட வி.சி.க முன்னாள் நிர்வாகி நடந்தது என்ன?

விருதுநகரில் கண்மாய் பகுதியில் இயற்கை உபாதை கழிக்கச் சென்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் நிர்வாகி மிளகாய்ப்பொடி தூவி தூவப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.



விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே உள்ள குரண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் விஜயகுரு. இவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் காரியாபட்டி ஒன்றியத்தின் முன்னாள் துணைச் செயலாளராக இருந்தவர். இவர், குரண்டி கண்மாய் பகுதியில் இயற்கை உபாதை கழிப்பதற்காக நடந்து சென்று கொண்டிருந்தபோது அங்குள்ள முட்புதரில் மறைந்திருந்த மர்ம நபர்கள் அவரது கண்களில் மிளகாய்ப்பொடியை தூவினர். அப்போது நிலைகுலைந்த அவரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பியோடிவிட்டனர். இதில், முகம் சிதைந்த நிலையில் உயிரிழந்தார்.

வீட்டிலிருந்து கிளம்பிய விஜயகுரு, நீண்டநேரம் ஆகியும் அவரை காணவில்லை என பல இடங்களிலும் தேடினர். இறுதியில் கண்மாய் பகுதிக்கு சென்ற நிலையில்தான் விஜயகுரு ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தது தெரிய வந்தது. தகவலறிந்த ஆவியூர் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். குரண்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் நடைபெற்று வந்த சமூக விரோத செயல்கள் குறித்து அவ்வப்போது காவல்துறைக்கு தொடர்ந்து தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்க வைத்ததாக கூறப்படுகிறது.

போலீஸாரின் முதல்கட்ட விசாரணையில், “ , கடந்த ஏப்ரல் 28ம் தேதி விஜயகுருவின் உறவினரான சக்திவேல் என்பவர், சிவகங்கை மாவட்டம், பூவந்தி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த உயிரிழப்புக்கு விஜயகுரு தான் காரணம் என சந்தேகித்து சக்திவேலின் உறவினர்கள் அவரிடம் அடிக்கடி தகராறு செய்து வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும், சாலை விபத்தில் உயிரிழந்த சம்பவத்திற்கு பழிவாங்கும் நோக்கில் இந்த கொலை நடைபெற்றதா?

அல்லது வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த ஏப்ரல் 10ம் தேதி, உயிரிழந்த விஜயகுருவின் வீட்டின் அருகே மது அருந்திய நபர்களை தட்டிக்கேட்ட அவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் கஞ்சா போதை ஆசாமிகள் கொடூரத் தாக்குதல் நடத்திய நிலையில் தற்போது விஜயகுரு கொலை செய்யப்பட்ட இந்த சம்பவம் குரண்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அதோடு அப்பெண்ணிடம் உங்களை டிஜிட்டல் முறையில் கைது செய்து இருப்பதாகவும், எப்போதும் தங்களது கண்காணிப்பில் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அப்பெண்ணும் அதன்படி நடந்து கொண்டார்.

கம்போடியாவில் இருந்து மும்பை பெண்ணை டிஜிட்டலில் கைது என்று சொல்லி ரூ.60 லட்சம் பறிப்பு: 4 பேர் கைது


பணமோசடி என்பதால் உங்களிடம் இருக்கும் பணத்தை தங்களிடம் கொடுக்கும்படியும் விசாரணை முடிந்தபிறகு பணத்தை திரும்ப கொடுத்துவிடுவதாக போலி துணை போலீஸ் கமிஷனர் தெரிவித்தார்.

# கம்போடியாவில் இருந்து மும்பை பெண்ணை டிஜிட்டலில் கைது என்று சொல்லி ரூ.60 லட்சம் பறிப்பு: 4 பேர் கைது

கம்போடியாவில் இருந்துகொண்டு மும்பையில் பெண்ணை டிஜிட்டலில் கைது செய்து ரூ.60 பறித்த நபரின் நான்கு கூட்டாளிகளை போலீஸார் கைது செய்துள்ளனர்.

பெண்கள் மற்றும் முதியவர்களை டிஜிட்டல் முறையில் கைது செய்து பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிக அளவில் நடந்து வருகிறது. இந்த சம்பவங்களில் ஏராளமானோர் கோடிக்கணக்கில் பணத்தை இழந்துள்ளனர். புதிதாக மும்பையை சேர்ந்த கணவனை இழந்த பெண் ஒருவரை மகாராஷ்டிராவை சேர்ந்த நபர் கம்போடியாவில் இருந்து கொண்டு டிஜிட்டல் முறையில் கைது செய்து ரூ.60 லட்சத்தை பறித்துள்ளார்.

மும்பை ஜோகேஸ்வரியை சேர்ந்த 58 வயது பெண்ணிற்கு மர்ம நபர் ஒருவர் போன்செய்து தன்னை மும்பை துணை போலீஸ் கமிஷனர் என்று கூறி வீடியோ காலில் பேசினார். அப்பெண்ணின் சிம்கார்டை பயன்படுத்தி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்காக அப்பெண் மீது நடவடிக்கை எடுக்க கோர்ட் உத்தரவிட்டு இருப்பதாக அப்பெண்ணிடம் தெரிவித்தார்.



இது குறித்து துணை போலீஸ் கமிஷனர் புருத்ஷோத்தம் கூறுகையில்,"சம்பந்தப்பட்ட பெண்ணிற்கு கடந்த ஆண்டு டிஜிபி என்று கூறிக்கொண்டு மர்ம நபர் வீடியோ காலில் பேசி இருக்கிறார். பணத்தை தனது வங்கிக்கணக்கில் பெற முதலில் அந்த நபர் முடிவு செய்தார். ஆனால் அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டு அப்பணத்தை ரொக்கமாக கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்பெண் தனது கணவரின் கடனை அடைக்க தனது சொத்து மற்றும் தங்க நகைகளை விற்பனை செய்து பணம் வைத்திருந்தார்.

மர்ம நபர்கள் அப்பெண்ணின் வீட்டிற்கு இரண்டு முறை கார்களில் வந்து ஒரு முறை ரூ.35 லட்சத்தையும், மறுமுறை ரூ.25 லட்சத்தையும் வாங்கிச்சென்றுள்ளனர். விசாரணையில் கம்போடியா வாட்ஸ்ஆப் நம்பர் பயன்படுத்தப்பட்டு இருந்தது. அந்த நம்பருக்கு அடிக்கடி யார் போன் செய்தது என்பதை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் ஜல்காவ் பகுதியை சேர்ந்த மகாஜன், காலே, ஜெயேஷ் மற்றும் வினோத் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

முக்கிய குற்றவாளியாக கருதப்படும் நபர் கம்போடியாவில் இருக்கிறார். அவர் 2023ம் ஆண்டு கம்போடியாவில் கால் சென்டர் வேலைக்காக சென்றார். அங்கிருந்து கொண்டு இந்தியாவை சேர்ந்தவர்களுக்கு போன் செய்து பணம் பறிப்பதை வழக்கமாக கொண்டுள்ளான். அவ்வாறு கிடைக்கும் பணத்தில் கம்போடியாவில் அவன் தனது காதலியுடன் ஹோட்டலில் சொகுசு வாழ்க்கை வாழ்கிறான்" என்று தெரிவித்தார். பணத்தை வாங்கிச்சென்ற நபர்கள் அதன் பிறகு தொடர்பை துண்டித்துக்கொண்ட பிறகுதான் அப்பெண்ணிற்கு தான் ஏமாற்றப்பட்டது தெரிய வந்தது. அதன்பிறகுதான் இது குறித்து போலீஸில்

புகார் செய்தார்.

76 வயது பெண்ணிடம் ரூ.1.4 கோடி பறிப்பு

இதே போன்று டெல்லியை சேர்ந்த 76 வயது பெண்ணை 14 நாட்கள் டிஜிட்டல் முறையில் கைது செய்து 24 மணி நேரமும் கண்காணித்து ரூ.1.4 கோடியை அபகரித்துள்ளனர். அப்பெண்ணிடம் உங்களது வங்கிக்கணக்கு காஷ்மீரில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு ஆயுதங்கள் வாங்க பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். மும்பை போலீஸ் அதிகாரி என்று கூறிக்கொண்டு அப்பெண்ணை வீடியோ கால் மூலம் 24 மணி நேரமும் கண்காணித்துள்ளனர்.

அதோடு அவருக்கு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அவர்களின் மிரட்டல்களுக்கு பயந்து தனது வங்கிக்கணக்கில் இருந்த ரூ.1.4 கோடியை அவர்கள் சொன்ன வங்கிக்கணக்கிற்கு




மாற்றியுள்ளார். அப்பெண்ணின் இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்தனர். அவர்களிடமும் சொல்லவில்லை. முழு பணமும் காலியான பிறகுதான் அப்பெண் இது குறித்து தனது உறவினர் ஒருவரிடம் தெரிவித்தார். அதன்பிறகுதான் இது குறித்து போலீஸில் புகார் செய்யப்பட்டது.

# பெரியகருப்பனின் புகார் `ஆதாரம் இல்லை' தேர்தல் ஆணையத்தின் பதில் என்ன?

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின், தொகுதி மாறி அனுப்பப்பட்ட தபால் வாக்கை மீட்டு, மறு எண்ணிக்கை கோரும் மனு மீது முடிவெடுக்க தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என தேர்தல் ஆணையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப்பப்பட்டதால், அந்த வாக்கை மீட்டு மறு எண்ணிக்கை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் தவெக வேட்பாளரிடம் தோல்வியடைந்த சிவகங்கை திருப்பத்தூர் திமுக வேட்பாளர் பெரியகருப்பன் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தேர்தல் ஆணையம் சார்பில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், `தேர்தல் முடிவுக்கு எதிராக தேர்தல் வழக்கு தான் தாக்கல் செய்ய முடியுமே தவிர, ரிட் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதால், இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. இதையே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும், உச்ச நீதிமன்ற தீர்ப்புகளும் உறுதி செய்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தபால் வாக்கு, தொகுதி மாறி அனுப்பப்பட்டுள்ளது என்ற புகாருக்கு எந்த ஆதாரங்களும் இல்லை. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, ஒரு தொகுதியில் எண்ணப்பட்ட தபால் வாக்கை, வேறு தொகுதிக்கு அனுப்ப முடியாது" என தேர்தல் ஆணைய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின், வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்ட தபால் வாக்கை பெற்று, மறு எண்ணிக்கை நடத்தக் கோரும் மனுக்கள் மீது முடிவெடுக்க தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் இல்லை எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக, தபால் வாக்குகள், தொகுதி எண், பெயருடன் தான் அனுப்பப்படுகின்றன. அதனால் தபால் வாக்கு வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதால், வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என, தேர்தல் ஆணையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# கிருஷ்ணகிரி: எரிந்த நிலையில் ராணுவ வீரர், அவர் தந்தை உடல்கள் திருமணம் மீறிய உறவால் நடந்த பயங்கரம்



ஜம்மு காஷ்மீரில் ராணுவத்தில் பணிபுரிந்து வந்த மகேஷ்குமார் சில நாட்களுக்கு முன்புதான் சொந்த ஊருக்கு வந்துள்ளார். மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியாவுக்கும் பூவரசன் என்பவருக்கும் திருமணம் மீறிய உறவு இருந்ததை தெரிந்துகொண்ட மகேஷ்குமார் பானுபிரியாவை கண்டித்துள்ளார்.

கிருஷ்ணகிரி அருகே இருவர் எரித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், கொலையானது ராணுவ வீரரும் அவர் தந்தை என்பதும், திருமணம் மீறிய விவகாரத்தால் இக்கொலை நடந்துள்ளதையும் காவல்துறை கண்டுபிடித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 11 ஆம் தேதி காலை கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை செல்லும் சாலையில் ஆலப்பட்டி ஊராட்சி பகுதியில் கருகிய நிலையில் ஒருவரின் சடலம் கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் காவல்துறை யினருக்கு தகவல் அளித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த கிருஷ்ணகிரி தாலுகா காவல்துறையினர் சடலம் கிடந்த பகுதியை ஆய்வு செய்தபோது அங்கிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் மேலும் ஒரு சடலம் கருகிய நிலையில் கிடந்ததையும் கண்டு பிடித்தனர்.

இரு உடலிலும் பெட்ஷீட்டை சுற்றி சருகுகளை மேலே போட்டு பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளதை தடயவியல் துறையினர் உறுதி செய்ய, இரு சடலங்களையும் உடற்கூராய்வுக்காக கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு காவல்துறையினர் அனுப்பி வைத்தனர்.

கொலை செய்யப்பட்டவர்கள் யார்? எந்த ஊர்? கொலையாளிகள் யார்? வேறு இடத்தில் கொலை செய்து இங்கு கொண்டு வந்து எரித்தார்களா? என பல கேள்விகள் எழுந்த நிலையில், சேலம் சரக டி.ஐ.ஜி சந்தோஷ் ஹடிமணி, கிருஷ்ணகிரி எஸ்.பி தங்கதுரை ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் வந்து விசாரணை நடத்தி 5 தனிப்படைகளை அமைத்து தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் அருகாமையிலுள்ள தருமபுரி, திருப்பத்தூர் மாவட்டத்திலும் காணாமல் போனதாக புகார்கள் வந்துள்ளதா என்று காவல் நிலையங்களில் ஆய்வு செய்த தனிப்படையினரின் தீவிர விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன.

கொலை செய்யப்பட்டவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பாலகுறி கிராமத்தை சேர்ந்த ராணுவ வீரரான மகேஷ்குமாரும் அவரது தந்தை செல்லப்பன் என்பதும் தெரிய வந்தது.

ஜம்மு காஷ்மீரில் ராணுவத்தில் பணிபுரிந்து வந்த மகேஷ்குமார் சில நாட்களுக்கு முன்புதான் சொந்த ஊருக்கு வந்துள்ளார். மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியாவுக்கும் பூவரசன் என்பவருக்கும் திருமணம் மீறிய உறவு இருந்ததை தெரிந்துகொண்ட மகேஷ்குமார் பானுபிரியாவை கண்டித்துள்ளார். இரண்டு நாட்களாக இருவருக்கும் சண்டை நடந்துள்ளது. இந்த நிலையில் மகேஷ்குமார் வீட்டுக்கு வந்த பூவரசனுடன் வாக்குவாதம் ஏற்பட்டு சண்டை நடந்துள்ளதில் மகேஷுகுமாரை கத்தியால் குத்தி கொலை செய்த பூவரசன், அந்த நேரம் வீட்டுக்கு வந்த மகேஷ்குமாரின் தந்தை செல்லப்பனையும் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளனர். இதற்கு பானுபிரியா உடந்தையாக இருந்துள்ளார்.

அதன் பின்னர் இரவு நேரத்தில் ஒவ்வொரு உடலாக ராயக்கோட்டை சாலைக்கு கொண்டு வந்து தென்னை ஓலைகளை உடல் மீது போட்டு பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளனர். இவை அனைத்தும் காவல்துறை விசாரணையில் உறுதியாக பூவரசனை கைது செய்தனர், இந்த சம்பவத்தில் வேறு யாரும் ஈடுபட்டுள்ளார்களா என்பது குறித்து பானுபிரியாவிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஒரே இடத்தில் 364 ரௌடிகள்; இனிமேல் எந்த குற்றத்திலும் ஈடுபடக்கூடாது’- திருச்சி எஸ்.பி வார்னிங்

திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் 364 பேரை திருச்சி சுப்பிரமணியபுரம் பகுதியில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் திரட்டி, மாவட்ட எஸ்.பி அவர்களை எச்சரித்து அறிவுரை வழனிய சம்பவம் கவனிக்க வைத்திருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் 364 பேரை திருச்சி சுப்பிரமணியபுரம் பகுதியில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் காவல்துறையினர் வரவழைத்தனர். அவர்கள் அனைவரையும் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வ நாகரத்தினம் முன்பு ஆஜர்படுத்தினர்.

அவர்கள் அனைவரின் தனிப்பட்ட விவரங்கள், குடும்ப சூழ்நிலை உள்ளிட்டவை குறித்து மாவட்ட எஸ்.பி செல்வ நாகரத்தினம் கேட்டறிந்தார். தொடர்ந்து, அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். குறிப்பாக, 'இனிமேல் எந்த விதமான குற்ற செயல்களிலும் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என எச்சரிக்கை விடுத்தார்.

எஸ்.பியின் எச்சரிக்கை கலந்த அறிவுரைக்கு பின், 'இனிமேல் குற்ற செயல்களில் ஈடுபட மாட்டோம்' என்கிற நிலைப்பாட்டோடு சரித்திர பதிவேடு குற்றவாளிகள் அனைவரும் அங்கிருந்து சென்றனர்.

திருச்சி மாவட்டத்தில் இது போன்ற நிகழ்வு இதுவே முதல் முறையாக நடத்தப்பட்டது என காவல்துறையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஒரே இடத்தில நூற்றுக்கணக்கான ரௌடிகளை வரவழைத்து எஸ்.பி அறிவுரை வழங்கிய சம்பவம், மாவட்ட அளவில் பேசுபொருளாகி இருக்கிறது.





# இந்தியர்கள் வேண்டாம்..!” – தைவானில் அரசின் முடிவுக்குக் கிளம்பும் எதிர்ப்பும் எதார்த்த நிலையும்!

தைவானில் நிலவும் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையைச் சமாளிக்க, இந்தியாவுடன் தைவான் அரசு 2024ம் ஆண்டு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MOU) மேற்கொண்டது. இதன்படி, முதற்கட்டமாக சுமார் 1,000 இந்தியத் தொழிலாளர்கள் இந்த ஆண்டிலேயே தைவான் செல்ல வாய்ப்புள்ளது. ஆனால், இந்தத் திட்டம் தற்போது அந்நாட்டில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு தைவானின் எதிர்க்கட்சியான குவோமின்டாங் (KMT) கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்தியத் தொழிலாளர்கள் ஒப்பந்தங்களை மீறி "தலைமறைவாக" (Absconding) வாய்ப்புள்ளதாகவும், இது அந்நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். தைவானில் ஏற்கனவே புலம்பெயர் தொழிலாளர்கள் தலைமறைவாகும் சிக்கல் இருப்பதால், இந்தத் திட்டம் அந்தப் பிரச்சனையைத் தீவிரப்படுத்தும் என்பது எதிர்க்கட்சிகளின் வாதம்.



பொதுமக்களிடையேயும் இந்தத் திட்டத்திற்கு எதிராகக் குரல்கள் எழுந்துள்ளன. சுமார் 42,000க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட மனு ஒன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமாகப் பெண்களின் பாதுகாப்பு மற்றும் சமூக ஒழுங்கு குறித்த கவலைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் குற்றப் புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டிச் சில தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிப்பது, ஒரு குறிப்பிட்ட நாட்டினரை முன்முடிவுகளுடன் அணுகும் போக்கைக் காட்டுவதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சில முக்கியமான உண்மைகளையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது என அரசியல் ஆர்வலர்கள் கருதுகின்றனர். உலகம் முழுவதும் சுமார் 3.5 கோடி இந்தியர்கள் வசிக்கின்றனர். அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், கனடா போன்ற நாடுகளில் இந்தியர்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்தாலும், அவர்களால் அந்த நாடுகளின் பாதுகாப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாகத் தரவுகள் இல்லை. தைவானில் ஏற்கனவே சுமார் 6,000 இந்தியர்கள் வசிக்கின்றனர். இது இப்போது வரவிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட ஆறு மடங்கு அதிகம். இதுவரை இந்த இந்தியச் சமூகத்தால் அங்கு எந்த விதமான பாதுகாப்புக் குறைபாடுகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய இன ரீதியிலான விவாதங்களைத் தாண்டி, தைவானின் தொழிலாளர் முறைமையில் உள்ள சிக்கல்களே மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. குறைந்த ஊதியம், நீண்ட நேர வேலை மற்றும் இடைத்தரகர்களின் சுரண்டல் போன்ற பிரச்சனைகளைத் தைவானில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்தத் துயரங்கள் சரிசெய்யப்படாமல் புதிய தொழிலாளர்களை வரவழைப்பது பிரச்சனையை மேலும் சிக்கலாக்கும் என்றும் சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

தைவான் அரசு தனது தொழில் வளர்ச்சிக்காக இந்தியத் தொழிலாளர்களை வரவேற்கத் தயாராக இருந்தாலும், உள்நாட்டு அரசியல் மற்றும் இன ரீதியிலான தவறான புரிதல்கள் இந்தத் திட்டத்திற்குத் தடையாக உள்ளன. "கொள்கைகளை விமர்சிப்பது நியாயமானது; ஆனால் முன்முடிவுகளின் அடிப்படையில் ஒரு சமூகத்தையே எதிர்ப்பது சரியல்ல" என்பதே நடுநிலையாளர்களின் கருத்தாக உள்ளது.

# முதலமைச்சர் ஜோசப் விஜய் வேங்கைவயல் செல்ல வேண்டும்’–வானதி சீனிவாசன் சொல்லும் காரணம்!

"உண்மையிலேயே பட்டியலின மக்கள் மீது அக்கறை இருக்குமானால், வேங்கைவயல் கிராமத்திற்கு நேரில் சென்று நீதிக்காக போராடிவரும் பட்டியலின மக்களைச் சந்திக்க வேண்டும்"

பா.ஜ.க. தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நம் பெருமைமிகு தமிழ்நாட்டிற்கு பெரும் களங்கமாக அமைந்தது புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் நடந்த அவலம். பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில், அவர்கள் பயன்படுத்தும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித மலம் கலக்கப்பட்டது, தமிழ்நாட்டையும் தாண்டி, ஒட்டுமொத்த இந்தியாவையும் அதிரச் செய்தது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க ஆட்சியில் சுமார் இரண்டு ஆண்டுகள் இந்த வழக்கை விசாரித்த காவல்துறை, வேங்கைவயல் கிராமத்தில் வசிக்கும் பட்டியலின மக்களே, அவர்கள் குடிக்கும் குடிநீரில் மனித மலத்தை கலந்தார்கள் என்று தீர்ப்பு எழுதியது.



தங்களுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தியும், தங்களது வலியை, வேதனையை உலகிற்கு உணர்த்தவும், வேங்கைவயல் மக்கள், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலை புறக்கணித்தனர். ஆனால், மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்துள்ளவர்கள் இதைப் பற்றி கவலைப்படவில்லை. முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய், பல்வேறு கட்சித் தலைவர்களை சந்தித்து வருகிறார். அவருக்கு உண்மையிலேயே பட்டியலின மக்கள் மீது அக்கறை இருக்குமானால், வேங்கைவயல் கிராமத்திற்கு நேரில் சென்று நீதிக்காக போராடிவரும் பட்டியலின மக்களைச் சந்திக்க வேண்டும். குடிநீரில் மனித மலம் கலக்கப்பட்ட வழக்கை மீண்டும் விசாரித்து உண்மை குற்றவாளிகளை கண்டறிய வேண்டும். சமூக நீதியை நிலைநாட்டுவோம் என்று மேடைகளில் முழங்கினால் மட்டும் போதாது. அதை செயலில் காட்ட வேண்டும். முதலமைச்சர் ஜோசப் விஜய் உடனடியாக வேங்கைவயல் செல்லுங்கள்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நிழல் உலகின் பிடியில் NEET: கனவுகளைத் திருடிய வினாத்தாள் கசிவு; நீட் முறைகேட்டின் விரிவான பின்னணி!

கடந்த மே 3ம் தேதி நாடு முழுவதும் நடைபெற்ற நீட்யூஜி (NEET-UG 2026) தேர்வு நடைபெற்றது. இந்தத் தேர்வின் வினாத்தாள் கசிந்தது பின்புதான் தெரியவந்தது. அதைத் தொடர்ந்து, மே 3ம் தேதி நடந்த நீட் தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை (NTA) (மே 12) அதிரடியாக அறிவித்தது. இந்த வினாத்தாள் கசிவு விவகாரம், தற்போது சிபிஐ (CBI) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாதக்கணக்கில் இரவு பகல் பாராமல் கனவுகளைத் தூக்கிச் சுமந்து, வெயிலிலும் வியர்வையிலும் தேர்வு மையத்தை நோக்கி ஓடிய 22.8 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை ஒரு குற்றவாளிக் கும்பல் சில மணி நேரங்களில் நாசம் செய்துள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய மருத்துவ நுழைவுத் தேர்வின் நம்பகத்தன்மையை மீண்டும் ஒருமுறை கேள்விக்குறியாக்கியுள்ள மோசமான சம்பவம் இது. தேர்வுக்கு முன்பே ஊக வினாத்தாள் வடிவில் கசிந்த வினாக்கள், குறிப்பாக வேதியியல் பிரிவில் பெருமளவு பொருந்தியிருந்த சூழலில், தேசிய தேர்வு முகமை (NTA) இறுதியில் தேர்வை ரத்து செய்யும் முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இது வெறும் தேர்வுக் கசிவு அல்ல. இது லட்சக்கணக்கான இளம் மனங்களின் நம்பிக்கையை, பெற்றோர்களின் உழைப்பை, மற்றும் நாட்டின் மருத்துவக் கல்வித் தரத்தையே கேலி செய்யும் ஒரு பெரும் தோல்வி.

ராஜஸ்தான் காவல்துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழு (SOG) நடத்திய முதற்கட்ட விசாரணையில் அதிர வைக்கும் தகவல்கள் வெளியானது. தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே 'ஊக வினாத்தாள்' என்ற பெயரில் ஒரு கேள்வித் தொகுப்பு மாணவர்களிடையே பரப்பப்பட்டுள்ளது. அந்தத் தொகுப்பில் இருந்த 410 வினாக்களில், வேதியியல் (Chemistry) பாடத்தில் மட்டும் சுமார் 120 வினாக்கள் அசல் வினாத்தாளுடன் அப்படியே ஒத்துப்போயுள்ளன. இது தற்செயலான நிகழ்வு அல்ல, திட்டமிட்ட கசிவு என்பதை இது உறுதிப்படுத்தியுள்ளது.

விசாரணையின்படி, இந்தச் சதித்திட்டம் மகாராஷ்டிராவின் நாசிக் பகுதியில் தொடங்கி, இந்தியாவின் கோச்சிங் மையங்களின் மையமான ராஜஸ்தானின் சிகார் (Sikar) வழியாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. வினாத்தாள்கள் டெலிகிராம், வாட்ஸ்அப் மற்றும் கண்டறிய முடியாத 'ஷேடோ சர்வர்கள்' (Shadow Servers) மூலம் பகிரப்பட்டுள்ளன. ஒரு வினாத்தாளின் விலை மாணவர்களின் வசதிக்கு ஏற்ப ரூ.30,000 முதல் ரூ.28 லட்சம் வரை கள்ளச்சந்தையில் விற்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக



நாசிக்கைச் சேர்ந்த சுபம் கைர்னார் என்பவர் உட்பட முக்கிய புள்ளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2024ம் ஆண்டு ஜார்கண்டில் வினாத்தாள் கசிவு சர்ச்சைகள் எழுந்தபோதிலும், தேர்வு முழுமையாக ரத்து செய்யப்படவில்லை. ஆனால், இம்முறை முறைகேட்டின் வீச்சு அதிகமாக இருந்ததால், நீட் வரலாற்றிலேயே முதல் முறையாக நாடு தழுவிய அளவில் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் வெப்ப அலைகளுக்கு மத்தியிலும், பல ஆண்டுகள் பயிற்சியின் பலனாகவும் தேர்வு எழுதிய 23 லட்சம் மாணவர்களுக்கு 'தேர்வு ரத்து' அறிவிப்பு பேரிடியாக இறங்கியுள்ளது. மாணவர்கள் மீண்டும் தேர்வுக்கு தயாராக வேண்டியது ஒரு பக்கம் என்றால், பெற்றோர்களுக்கு மீண்டும் ஒருமுறை பயணச் செலவு, பயிற்சி மையக் கட்டணச் சுமையைச் சுமக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த விவகாரம் தொடர்பாக இந்தியா டுடே செய்தி நிறுவனம் நாட்டின் வெவ்வேறு நகரங்களில் தேர்வு எழுதிய மாணவர்களிடம் உரையாடிருக்கிறது. அந்த உரையாடலில் மாணவர்களின் வலியும், வேதனையும் பதிவு செய்திருக்கிறது. டெல்லியைச் சேர்ந்தவரும், தற்போது டெல்லியில் MBBS படித்து வருபவருமான அக்சித் குரானா (28) வினாத்தாள் தொடர்பாக தேர்வு சமயத்தில் தான் எதிர்க்கொண்ட சூழலை விவரிக்கிறார். அவரின் குரலில், `நீட் தேர்வுக்கான தயாரிப்பு என்பது பல மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிடும். அதேபோலத்தான் இந்த வினாத்தாள் தொடர்பான வதந்திகளும் மிக முன்கூட்டியே வேர்விடத் தொடங்குகின்றன.

அதுவரை வெளிப்படையாக இருந்த குழுக்கள் திடீரென கலைக்கப்பட்டு, "விஐபி குரூப்" என்ற பெயரில் ரகசியமான சிறிய குழுக்களாக மாற்றப்படுகின்றன.

தொடக்கத்தில் இது மிகவும் இயல்பான ஒரு கல்வி உதவி போலத் தோன்றும். பயிற்சி மையங்களில் படிக்கும் நண்பர்கள் அல்லது சீனியர்கள் மூலம் டெலிகிராம் மற்றும் வாட்ஸ்அப் குழுக்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இந்தக் குழுக்கள் "இலவசக் குறிப்புகள்", "முக்கிய வினாக்கள்" என்ற பெயரில் செயல்படுவதால், மாணவர்கள் எவ்வித அச்சமுமின்றி அதில் இணைகிறார்கள். ஆரம்பத்தில் பாடப்புத்தகக் குறிப்புகள் மற்றும் மாதிரித் தாள்கள் மட்டுமே பகிரப்படுவதால், ஆசிரியர்கள் கூட இக்குழுக்களில் அங்கமாக இருப்பதுண்டு.

தேர்வு நெருங்க நெருங்க, அதாவது இரண்டு மாதங்களுக்கு முன்பிலிருந்து இந்தக் குழுக்களின் முகம் மாறத் தொடங்குகிறது. அதுவரை வெளிப்படையாக இருந்த குழுக்கள் திடீரென கலைக்கப்பட்டு, "விஐபி குரூப்" என்ற பெயரில் ரகசியமான சிறிய குழுக்களாக மாற்றப்படுகின்றன. அங்கு பகிரப்படும் தகவல்கள் மிகவும் பாதுகாப்பானதாகக் கருதப்படும். ஸ்கிரீன்ஷாட் எடுக்க முடியாது, செய்திகள் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு தானாகவே மறைந்துவிடும் (Disappearing messages) போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. நிர்வாகிகளைத் தனியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதன் மூலம், ஒரு சாதாரணக் குழு ரகசியமான ஒரு வியாபாரத் தளம் போல உருமாறுகிறது.



இந்த நிழல் உலகத்தில் "வினாத்தாள் கசிவு" என்ற நேரடி வார்த்தை ஒருபோதும் பயன்படுத்தப்படுவதில்லை. சட்ட ரீதியான சிக்கல்களைத் தவிர்க்கவும், ரகசியத்தைக் காக்கவும் குறியீட்டுச் சொற்களே ஆளுகின்றன. "உள்முறைத் தகவல்கள்", "அதிக வாய்ப்புள்ள வினாக்கள்", "நிச்சயம் வரக்கூடிய கடைசி நிமிடக் கேள்விகள்" போன்ற சொற்கள் மூலம் மாணவர்களுக்குத் தூண்டில் போடப்படுகிறது. வினாத்தாள் கசிந்திருப்பதை வெளிப்படையாகச் சொல்லாமல், அதன் முக்கியத்துவத்தை மட்டும் உணர்த்தும் வகையில் இந்தப் பேச்சுகள் அமைகின்றன. இதனால் மாணவர்கள் எவ்வித குற்ற உணர்ச்சியும் இன்றி, ஆர்வத்தினால் இந்த வலையில் விழுகிறார்கள்.

இறுதிக்கட்டத்தில் மாணவர்கள் மத்தியில் ஒருவிதமான "பீதி" செயற்கையாக உருவாக்கப்படுகிறது. "நமக்குத் தெரியாத ஏதோ ஒரு ரகசியம் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கிறது, அவர்கள் நம்மை விட அதிக மதிப்பெண் எடுத்துவிடுவார்களோ" என்ற தொடர்ச்சியான பயமே மாணவர்களை இக்குழுக்களில் பிணைத்து வைத்திருக்கிறது. உண்மையில் வினாத்தாளை யாரும் நேரில் பார்த்திருக்காவிட்டாலும், அத்தகைய ஒரு சூழல் நிலவுவதே நேர்மையாகப் படிக்கும் மாணவர்களையும் நிலைகுலையச் செய்கிறது. மற்றவர்களுக்குக் கிடைப்பது நமக்கும் கிடைக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை, இந்த விசித்திரமான இணை உலகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது." என்கிறார்.

எது உண்மை, எது பொய் என்று தெரியாமலேயே மாணவர்கள் ஒரு மாய வலைக்குள் தள்ளப்படுகிறார்கள்.



NEET தேர்வு பயிற்சிக்காக கடந்த நான்கு ஆண்டுகளாக கோட்டாவில் தங்கி படித்து வரும் ரியா பிள்ளை (26) (பெயர் மாற்றப்பட்டுள்ளது) நீட் தேர்வுக்கு முந்தைய இறுதி நாட்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான மன அழுத்தம் குறித்து பேசியிருக்கிறார்.

நீட் தேர்வுக்கு முந்தைய இரவு பைத்தியக்காரத்தனமான சூழலாக இருக்கும். மாணவர்களின் வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் குழுக்களில் திடீரென ஏராளமான PDF கோப்புகள் பகிரப்படுகின்றன. இவை எங்கிருந்து வருகின்றன என்று கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான காரணத்தைக் கூறுகிறார்கள். ஒருவர் இது ஒரு மூத்த பேராசிரியர் அனுப்பியது என்பார், மற்றொருவர் டெல்லியில் உள்ள ஒரு அதிகாரப்பூர்வ நபர் உறுதிப்படுத்தியதாகக் கூறுவார், இன்னும் சிலரோ இது எய்ம்ஸ் (AIIMS) பேராசிரியரால் தயாரிக்கப்பட்டது எனப் பீதியைக் கிளப்புவார்கள். இந்தத் தகவல்களில் எது உண்மை, எது பொய் என்று தெரியாமலேயே மாணவர்கள் ஒரு மாய வலைக்குள் தள்ளப்படுகிறார்கள்.

நீண்ட காலத் தயாரிப்பு மற்றும் விடுதி வாழ்க்கை காரணமாக மாணவர்கள் ஏற்கனவே மனதளவில் சோர்வடைந்திருப்பார்கள். அந்தச் சூழலில், இதுபோன்ற ரகசியக் குழுக்களில் இருந்து விலகி இருப்பது தங்களைத் தாங்களே முட்டாளாக்கிக் கொள்வது போன்ற உணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துகிறது. "ஒருவேளை மற்றவர்களுக்கு உண்மையான வினாத்தாள் கிடைத்து, நமக்குக் கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது?" என்ற பயமே மாணவர்களை இக்குழுக்களில் கட்டிப்போடுகிறது. இந்த பயம் அவர்களின் தூக்கத்தையும், வழக்கமான படிப்பு முறையையும் முற்றிலுமாகச் சிதைத்து விடுகிறது.

தேர்வுக்கு முந்தைய நாள் இரவு, பெரும்பாலான மாணவர்கள் நிதானமாகப் படிப்பதைக் கைவிட்டு விடுகிறார்கள். அதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் கையில் இருக்கும் ஸ்கிரீன்ஷாட்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது, வேதியியல் மற்றும் உயிரியல் கேள்விகளைச் சரிபார்ப்பது போன்ற வேலைகளில் இறங்குகிறார்கள். புதிய கோப்புகள் ஏதேனும் வெளியாகியுள்ளதா என்று பார்க்க ஒவ்வொரு சில நிமிடங்களுக்கும் டெலிகிராம் சேனல்களை Refresh செய்துகொண்டே இருக்கிறார்கள். படிப்பு என்பதைத் தாண்டி, ஒரு "புதையல் தேடல்" போன்ற பதற்றமான சூழல் அங்கு நிலவுகிறது.

இந்தத் தீவிரமான பதற்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அடையாளம் தெரியாத நபர்கள் மாணவர்களிடம் பணம் பறிக்கிறார்கள். சில நூறு ரூபாய்கள் முதல் சில ஆயிரம் ரூபாய்கள் வரை ஒரு PDF கோப்பிற்காக மாணவர்கள் செலவிடுகிறார்கள். இந்தப் பணப்பரிமாற்றங்கள் அனைத்தும் தனிப்பட்ட UPI முகவரிகள் மூலம் ரகசியமாக நடப்பதால், இந்தக் கோப்புகளை விற்பது யார், அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது கடைசி வரை யாருக்கும் தெரிவதில்லை. மாணவர்கள் தாங்கள் வாங்கும் பொருட்கள் போலியானவை என்று ஒருபுறம் நினைத்தாலும், சிறு நம்பிக்கையில் தங்கள் பணத்தையும் நேரத்தையும் இதில் இழக்கிறார்கள்." என்றார்.

கடந்த 3ம் தேதி ஹைதராபாத்திலிருந்து நீட் தேர்வு எழுதிய பைசல் இக்பால் என்ற மாணவர், ``இந்த டிஜிட்டல் முறைகேடுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தோன்றி மறையும் "கள்ளச்சந்தை" (Black Market) போலச் செயல்படுகின்றன. தேர்வு நெருங்கும் போது மட்டும் உயிர்பெறும் இந்தக் குழுக்கள், தேர்வு முடிந்தவுடன் தடயமே இல்லாமல் மறைந்துவிடுகின்றன. இதில் ஒரு நுணுக்கமான படிநிலை உள்ளது. பெரிய பொதுக்குழுக்களில் மேலோட்டமான தகவல்கள் பகிரப்படும். ஆனால், பரிந்துரையின் பேரில் மட்டுமே நுழையக்கூடிய ரகசியக் குழுக்களில் "இறுதிப் பட்டியல்" என்ற பெயரில் வினாக்கள் கைமாறுகின்றன. வியாபாரம் முடிந்ததும் இந்தக் குழுக்கள் கலைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு வேறு பெயரில் மீண்டும் உருவெடுக்கின்றன." என்றார்.

இந்த வினாத்தாள் கசிவு வதந்திகளால் ஏற்படும் மிகப்பெரிய பாதிப்பு உளவியல் ரீதியானது. கடின உழைப்பை விட, சரியான "தகவல்களும்" ரகசிய அணுகலுமே வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற தவறான எண்ணம் ஒரு தலைமுறை மாணவர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்து வருகிறது. இதனால் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் கூட கிசுகிசுக்களுக்கு ஆளாகிறார்கள். ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும், ஒவ்வொரு PDF கோப்பும் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கப்படுகிறது. இது ஒட்டுமொத்த தேர்வு முறையின் மீதான நம்பிக்கையைச் சிதைக்கிறது.

ஃபைசல் இக்பாலின் கூற்றுப்படி, இன்றைய நீட் தேர்வில் இரண்டு வகையான பாடத்திட்டங்கள் நிலவுகின்றன. ஒன்று, தேசியத் தேர்வு முகமை (NTA) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் பாடத்திட்டம்.



மற்றொன்று, இந்த ரகசியக் குழுக்களுக்குள் உலாவரும் இரகசியப் பாடத்திட்டம். மாணவர்கள் எதைப் படிப்பது என்பதைத் தாண்டி, எதைக் கையில் வைத்திருந்தால் வெற்றி பெற முடியும் என்ற குழப்பமான மனநிலையில் தேர்வை எதிர்கொள்கிறார்கள். இத்தகைய சூழல் இந்தியாவின் நுழைவுத்தேர்வு கலாச்சாரத்தையே பெரும் பதற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது." எனக் கட்டுரை முடிகிறது.





2024 பொதுத் தேர்வுகள் சட்டம் (Public Examinations Act 2024) அமலில் இருந்தும், இவ்வளவு பெரிய முறைகேடு நடந்தது NTAவின் பாதுகாப்பு குறைபாடுகளை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது. வினாத்தாள்களை முழுமையாக என்க்ரிப்ட் செய்யப்பட்ட டிஜிட்டல் முறையில் விநியோகிப்பதும், கோச்சிங் மையங்களின் ஆதிக்கத்தைக் குறைப்பதும் மட்டுமே இதற்குத் தீர்வாகும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஆனால் சட்டம் மட்டுமே போதாது. வினாத்தாள் விநியோகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், அச்சிடுவதிலிருந்து தேர்வு மையம் சேருவது வரை பல அடுக்கு கண்காணிப்பு முறை கட்டாயமாக்கப்பட வேண்டும். தேர்வு நடத்துவதற்கு தனியார் நிறுவனங்களை நம்பும் தற்போதைய மாதிரியே இந்த ஊழலுக்கு வாயில் திறந்து கொடுக்கிறது என்ற சந்தேகத்தையும் இனி தவிர்க்க முடியாது.

குற்றவாளிகளுக்கு ஜாமீன் இல்லாத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ள நிலையில், CBI விசாரணை வெறும் கைதுகளோடு நின்றுவிடாமல், இந்த சங்கிலியின் உச்சத்தில் இருக்கும் நபர்கள் வரை நீளும் என்ற எதிர்பார்ப்பு மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. ஏனென்றால், சிகார் கோச்சிங் சென்டர்களிலிருந்து நாசிக் வரை பரவிய இந்த வலை, ஒரு சாதாரண தனிநபரால் நெய்யப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

இறுதியில், இது வெறும் நிர்வாகத் தோல்வி மட்டுமல்ல. நேர்மையாக உழைத்த லட்சக்கணக்கான மாணவர்களுக்கு நாடு செய்த துரோகம். அந்த நம்பிக்கையை மீட்டெடுக்க ஒரே நேரத்தில் தண்டனையும் வேண்டும், சீர்திருத்தமும் வேண்டும்.



# நம்பிக்கை சிதையலாகாது!

நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வின் ஒருபகுதியாக உள்ளது மூளைச் சாவு ஏற்பட்டோரின் உடல் உறுப்புகளை தானம் செய்வது.

நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வின் ஒருபகுதியாக உள்ளது மூளைச் சாவு ஏற்பட்டோரின் உடல் உறுப்புகளை தானம் செய்வது. அண்மைக்காலமாக, ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர், கிராமம், நகரம் என்ற எந்தப் பாகுபாடுமின்றி, தங்கள் குடும்பத்தில் மூளைச் சாவு அடைந்த ஒருவரின் உடல் உறுப்புகளை தானமாக அளிப்பது அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் பெரும்பாலான மூளைச் சாவு சம்பவங்கள் சாலை விபத்தால் ஏற்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற தருணங்களில் இறந்தவர்களின் உடல் உறுப்புகளை தானமாக கொடுக்குமாறு அவர்களது குடும்பத்தினரிடம் கேட்பது மிகவும் தர்மசங்கடமானது. என்றாலும், அந்த உறுப்புகளின் மூலம் பலர் மறுவாழ்வு பெறுவார்கள் என்பதால், சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் மருத்துவர்கள் இறந்தவர்களின் குடும்பத்தினரிடம் பக்குவமாகப் பேசி, உறுப்பு தானத்துக்கு ஒப்புதல் பெறுகின்றனர்.


உடல் உறுப்புகளை தானமாகப் பெறுவதில் உள்ள சட்ட நடைமுறைகள் குறித்து பெரும்பாலான சாமானியர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. இருந்தாலும், மருத்துவர்கள் மீது உள்ள நம்பிக்கையின் அடிப்படை யிலேயே அவர்கள் உறுப்பு தானம் அளிக்க சம்மதிக்கின்றனர். இவ்வாறு உணர்வுபூர்வமான நம்பிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படும் உடல் உறுப்புகள் உண்மையில் இலவசமாக சேவை அடிப்படையில் மற்றவர்களுக்கு பொருத்தப்படுகிறதா என்பதில்தான் இப்போது விமர்சனம் எழுந்துள்ளது.

கேரளத்தைச் சேர்ந்த தற்போது 78 வயதாகும் ஒரு மருத்துவர், மருத்துவமனைகள் உறுப்பை சேகரிப்பதற்காக, நோயாளிகளுக்கு முன்கூட்டியே மூளைச் சாவு ஏற்பட்டதாக அறிவிக்கின்றன என குற்றஞ்சாட்டியதோடு, கேரள உயர்நீதிமன்றத்தில் இது குறித்த பொதுநல வழக்கை கடந்த 2017, மே மாதம் தொடுத்தார். இந்த முறைகேடு குறித்து கவலை தெரிவித்தாலும், மாநில அரசு அளித்த உறுதிமொழியை ஏற்று ஒரு மாதத்திலேயே வழக்கை முடித்துவைத்தது நீதிமன்றம். இந்த வழக்கை கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்திவந்த அந்த மருத்துவர், கடந்த ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அதை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அடங்கிய அமர்வு, கடந்த ஏப்ரல் 28இல் அளித்த முக்கிய உத்தரவு, மே 2ஆம் தேதி வெளியாகி உள்ளது. அதன்படி, தற்போது பயன்படுத்தப்படும் அப்னியா சோதனைக்குப்

பதிலாக, மூளை இறப்பு நிலையைத் தீர்மானிக்க, செரிப்ரல் ஆஞ்சியோகிராம் மற்றும் எலக்ட்ரோ என்செஃபலோகிராம் போன்ற முறைகள் சிறந்தவையா என்பதை ஆய்வு செய்ய 3 நரம்பியல் அல்லது நரம்பு அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கொண்ட குழுவை அமைக்க புது தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்துக்கு (எய்ம்ஸ்) உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தக் குழு தனது பரிந்துரையை 2 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ள நீதிமன்றம், வழக்கு விசாரணையை ஜூலை 21ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள கேரள மருத்துவர், தற்போதைய அப்னியா சோதனை நம்பகமானதல்ல, அந்த சோதனை நடத்தப்படுகிறதா, இல்லையா என்பதற்கே ஆதாரம் இல்லை. மருத்துவர்கள் எதை வேண்டுமானாலும் எழுதலாம். நோயாளியைப் பரிசோதிக்காமலேயே ஒருவரை மூளைச் சாவு அடைந்துவிட்டார் என அறிவிக்கலாம். இந்தச் செயல்முறையின் விடியோ பதிவு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே செய்யப்படுகிறது. எலக்ட்ரோஎன்செஃபலோகிராம்





மற்றும் ஆஞ்சியோகிராம் போன்ற சோதனைகள் மூளை இறப்பை உறுதி செய்வதற்கு முன்பாக செய்யப்படுமானால், அவற்றுக்கு தெளிவான பதிவுகள் இருக்கும்; இந்தப் பரிந்துரையை கேரள சுகாதாரத் துறை முதலில் ஏற்றுக்கொண்டாலும், பிறகு பெரிய தனியார் மருத்துவமனைகளின் அழுத்தத்தால் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்பது அவரது குற்றச்சாட்டு.

உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இதில், அரசு, தனியார் மருத்துவமனைகளுக்கு உதவவும் கோடிக்கணக்கான ரூபாயை மத்திய அரசு வழங்குகிறது. இதன் பயனாக உலக அளவில் உறுப்பு மாற்று சிகிச்சையில் இந்தியா 3ஆவது இடத்திலும், தேசிய அளவில் தமிழகம் முதலிடத்திலும் உள்ளன.

மூளைச் சாவு அடைந்தவர்களிடம் இருந்து பெறப்படும் உறுப்புகள், முறையாக முன்பதிவு செய்த நோயாளிகளுக்கு மட்டுமே பொருத்தப்படுகிறதா, உறுப்பு தானம் பெறுவதில் தனியார் மருத்துவமனைகள் அதிக ஆர்வம் காட்டுவதன் நோக்கம் என்ன? உறுப்பு தானம் பெறுவோரின் அடையாளங்களை வெளிப்படுத்த முடியாது என்பதால், இதில் தவறு நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம் போன்ற கேள்விகள், சந்தேகங்களுக்கு வெளிப்படையான விளக்கம் அளிக்கப்பட்டால், இதன்மீதான நம்பகத்தன்மை அதிகரிக்கும்.


எங்கோ இருக்கும் முகம் தெரியாத ஒருசிலர் பயன்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் உறுப்பு தானம் வழங்க முன்வரும் உறவுகளின் நம்பிக்கை சிதையக் கூடாது. அதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். தானமாகப் பெறப்படும் உறுப்புகள் முன்பதிவு செய்திருக்கும் வரிசைப்படியே நோயாளிகளுக்கு பொருத்தப்படும் என்பதையும், அது குறித்த வெளிப்படைத்தன்மையையும் மக்களிடம் கொண்டுசேர்க்கும் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது.











# மின் நுகர்வு சவாலும் தீர்வும்!

கேரள மாநிலம்போல அல்லாமல் தமிழ்நாடு மின் வாரியம் ஓரளவுக்கு முன்னெச்சரிக்கையுடன் தயாராக இருந்தாலும்கூட, தடையற்ற மின்சாரம் என்பதை உறுதிப்படுத்துவது சுலபமல்ல.

முன்னெப்போதும் இல்லாத அளவிலான மின்வெட்டை (லோட் ஷெட்டிங்) சந்தித்து வருகிறது கேரளம். இப்போது ஏற்பட்டிருக்கும் மின் தட்டுப்பாட்டுக்கு கேரள மாநில மின்வாரியம் முன்னெச்சரிக்கையுடனும், தொலைநோக்குப் பார்வையுடனும் செயல்படாமல் இருந்ததுதான் காரணம் என்று பரவலாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

ஏப்ரல், மே மாதங்களில் வழக்கமாக அதிகரிக்கும் மின் பயன்பாட்டை ஓராண்டுக்கு முன்பே கேரள மின்வாரியம் உணர்ந்திருந்தும், அதை ஈடுகட்ட மின்சாரம் வாங்குவது குறித்துத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இத்தனைக்கும் கடந்த மூன்றாண்டுகளாகக் கேரளத்தில் வழக்கத்தைவிட அதிகமாக பருவமழை பொழிந்தது.

கடந்த ஆண்டு மிக அதிகமான தண்ணீர் வரவு காரணமாக அணைகள் நிரம்பி வழிந்தன. கோடைகாலத்துக்காக சேமித்து வைக்க வேண்டிய ஐந்து மாதத் தண்ணீரை மின்சார வாரியம் வீணாக்கி விட்டது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. தாராளமாக அணைகள் நிரம்பி இருந்தும்கூட, அதை முறையாகப் பயன்படுத்தி மின் உற்பத்தியை அதிகரிக்கவும், தண்ணீரை சேமித்து வைக்கவும் தவறியதன் விளைவை இப்போது மாநிலம் எதிர்கொள்கிறது.

ஏப்ரலுடன் ஒப்பிடும்போது ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வெளி மாநிலங்களில் இருந்து பெறும் மின்சாரத்துக்கு விலை குறைவு. அந்த மாதங்களில் அணைகளில் தண்ணீரைச் சேகரித்து வைத்துக் கொண்டு, பிற மாநிலங்களில் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்ய வாரியம் தவறிவிட்டது. அப்போது உற்பத்தியைத் தொடங்கியதன் விளைவாக, அணைகளில் இருந்த வெள்ளம் வீணாக்கப்பட்டது.

மின் பயன்பாடு ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கும் என்பது பொது நியதி; வழக்கம். அதற்கேற்றாற்போல, மின் உற்பத்தியை அதிகரித்துவிட முடியாது. தண்ணீர் மிகை மாநிலமாகக் கேரளம் இருந்தும்கூட அதன் தேவைக்கு ஏற்ப கோடைகாலங்களில் குடிநீர் கிடைப்பதில்லை என்பதுடன், போதிய மின்



உற்பத்தியும் இருப்பதில்லை. மாநிலத்தின் 70% மின்தேவை பல்வேறு ஒப்பந்தங்கள் மூலம் அதிக விலை கொடுத்து வெளியில் இருந்துதான் வாங்கப்படுகிறது.

மாநிலங்களுக்கிடையில் மின்சாரம் வாங்கிக் கொள்வதில் தேசிய அளவில் மத்திய அரசு சில நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்ததைத் தொடர்ந்து, நாடு தழுவிய அளவில் ஓரளவுக்கு மிகப் பெரிய அளவில் மின் விநியோகமும், கொள்முதல் விலையும் சீரமைக்கப்பட்டிருக்கிறது.

அவ்வப்போதைய தேவைக்கேற்ப வெளியில் இருந்து மின்சாரம் வாங்கிக் கொள்ளலாம் என்கிற நிலைப்பாட்டை கேரள மாநில மின்சார வாரியம் கையாள்வதுதான் இப்போது மாநிலம் எதிர்கொள்ளும் மின்வெட்டுக்குக் காரணம். எதிர்பார்த்ததைவிட அதிகரித்த கோடை காரணமாக வட மாநிலங்களில் மின் பயன்பாடு அதிகரித்து விட்டதால், வெளிமாநிலங்களுக்கு உபரி மின்சாரம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறைந்த கட்டணத்தில் மின்சாரம் பெறுவதற்கு நீண்டகால அல்லது ஒரு சில ஆண்டுகளுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ள மின்சார ஒழுங்காற்று ஆணையம் கேரள மின்வாரியத்தைப் பலமுறை கேட்டுக் கொண்டது. ஆனால், அப்படி ஒப்பந்தங்கள் மேற்கொள்ள வாரியத்தால் இயலவில்லை. கடந்த பத்தாண்டு பினராயி விஜயன் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் இதுபோலக் கடுமையான மின்தடை ஏற்படுவது புதிதொன்றுமில்லை.


அண்டை மாநிலமான கேரளத்துக்கு எதுவோ அதுதான் தமிழகத்துக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முந்தைய ஜெயலலிதா





தலைமையிலான அதிமுக ஆட்சியில் தமிழகத்தை எப்படியும் மின்மிகை மாநிலமாக மாற்றிவிட வேண்டும் என்று முன்னெடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் இப்போதும் நமது மின் தேவையை ஈடுகட்ட கை கொடுக்கின்றன. ஆனால், ஆண்டுதோறும் அதிகரித்துவரும் மின்தேவையை ஈடுகட்டுவது என்பது சுலபமல்ல.

தமிழகத்தின் கோடை வெப்பம் காரணமாக தினசரி மின் நுகர்வு 20,000 மெகாவாட்டைக் கடந்து விட்டது. அடுத்துவரும் வாரங்களில் அதுவே தினசரி 22,000 மெகாவாட்டாக உயரக்கூடும். சாதாரண காலங்களில் 16,000 மெகாவாட் தேவைப்படும். கோடை அதிகரிக்கும்போது மின்விசிறி, ஏ.சி., குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்டவற்றின் பயன்பாடு அதிகரிப்பதால் 20,000 மெகாவாட் வரையிலும் அதிகரிப்பது வழக்கம்.




தமிழக மின் வாரியத்தின் கீழ் இயங்கும் அனல் மின்நிலையங்கள் மூலம் தினசரி 4,000 மெகாவாட்; மத்திய அரசின் தொகுப்பில் இருந்து 6,000 மெகாவாட்; சூரிய மின்சக்தி மூலம் 6,000 மெகாவாட்; நீண்டகால கொள்முதல் திட்டத்தின் கீழ் 2,000 மெகாவாட்; நடுத்தரகால கொள்முதல் மூலம் 2,000 மெகாவாட் மின்சாரம் தற்போது கிடைத்து வருகிறது. குறுகிய கால மின் கொள்முதல் மூலம் மீதமுள்ள 2,000 மெகாவாட் பெறப்படுகிறது.

மின்சார பரிமாற்றத் திட்டத்தின் கீழ் அடுத்த மூன்று மாதங்களுக்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் மின்சாரம் பெறுவதன் மூலம் தேவை ஓரளவுக்கு ஈடுகட்டப்படுகிறது. கேரள மாநிலம்போல அல்லாமல் தமிழ்நாடு மின் வாரியம் ஓரளவுக்கு முன்னெச்சரிக்கையுடன் தயாராக இருந்தாலும்கூட, தடையற்ற மின்சாரம் என்பதை உறுதிப்படுத்துவது சுலபமல்ல.


ஜெனரேட்டர், இன்வெர்ட்டர் வைத்துக் கொள்வதைக் கைவிட்டு, வீட்டுக்கு வீடு சூரிய மின்சக்தி மூலம் அடிப்படை மின்சாரத் தேவைகளை ஈடுகட்ட முடிந்தால் மட்டுமே, வருங்காலத்தில் மின்வெட்டிலிருந்து தமிழகம் தப்பிக்க முடியும்.



# அங்கம் வங்கம் கலிங்கம்

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பிளவுபடுத்தப்பட்ட பண்டைய அங்க தேசம் (பிகார்), வங்க தேசம் (மேற்கு வங்கம்), கலிங்க தேசம் (ஒடிஸா) ஆகிய மூன்றும் இப்போது பாஜகவின் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களாக மாறி இருக்கின்றன.

மேற்கு வங்கத்தில் சுவேந்து அதிகாரி தலைமையில் இன்று பாஜக ஆட்சி அமைய இருக்கிறது. மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் 294 இடங்களில் 207 இடங்களை வென்று தனிப் பெரும்பான்மையுடன் பாஜக ஆட்சி அமைக்கிறது. 2016இல் வெறும் மூன்று இடங்களை மட்டுமே வென்ற பாஜக, 2021இல் 77 இடங்களில் வென்று எதிர்க்கட்சியாக உயர்ந்து இப்போது தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க இருப்பதை வரலாற்றுச் சாதனை என்றுதான் கூற வேண்டும்.




ஒன்றுபட்ட வங்காளம், பிரிட்டிஷ் காலனி ஆட்சியில் பிகார், ஒடிஸா, வங்காளம் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து மிகப் பெரிய போராட்டம் நடத்தப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பிளவுபடுத்தப்பட்ட பண்டைய அங்க தேசம் (பிகார்), வங்க தேசம் (மேற்கு வங்கம்), கலிங்க தேசம் (ஒடிஸா) ஆகிய மூன்றும் இப்போது பாஜகவின் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களாக மாறி இருக்கின்றன.

திரிபுரா, அஸ்ஸாம் மாநிலங்களை போலல்லாமல், மேற்குவங்கத்தில் பாஜக தனது செல்வாக்கை உடனடியாக நிலைநாட்டி விடவில்லை. கடந்த 10 ஆண்டுகள் இதற்காக அந்தக் கட்சி கடுமையாக உழைத்திருப்பது மட்டுமல்லாமல், அடித்தட்டிலிருந்து மேல் நிலை வரையில் மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டு தனது வெற்றியைக் கட்டமைத்திருக்கிறது.

ஆட்சிக்கு எதிரான மனநிலை தேர்தலில் பிரதிபலிக்கும் என்பது உண்மை. அது மறையக்கூடும், பிளவுபடக்கூடும் அல்லது ஒன்றுபட்டு ஆட்சிக்கு எதிரான சூழலை உருவாக்கக் கூடும். எதுவாக இருந்தாலும் அதைத் திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்வதில்தான் ஓர் அரசியல் கட்சியின் வெற்றி அடங்கி இருக்கிறது.

நடந்து முடிந்த தேர்தலின் மிக முக்கியமான அம்சம் பாஜகவின் அமைப்பு ரீதியான கட்டமைப்பு. வாக்கு விகிதத்தை இடங்களாக மாற்றுவது எளிதல்ல. குறைந்த வாக்கு வித்தியாசம்,

அதிகரித்த வாக்குப் பதிவு, வாக்குச் சாவடி அளவிலான தேர்ந்த கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில்தான் தேர்தல் வெற்றிகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை நடந்து முடிந்த மேற்கு வங்க தேர்தலில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கட்டமைத்த வியூகம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

பவானிபூர் தொகுதியில் முன்னாள் முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தொடர்ந்து வெற்றி பெற்றதற்கான காரணத்தை அந்தத் தொகுதிலேயே தங்கியிருந்து பலரைச் சந்தித்து ஆய்வு செய்து தெரிந்து கொண்டார் அமித் ஷா. இறந்து போனவர்களும், போலி வாக்காளர்களும் பவானிபூர் தொகுதியில் கணிசமாக இருந்தது கண்டறியப்பட்டது.

எஸ்.ஐ.ஆர். மூலம் அகற்றப்பட்ட 47,000 வாக்காளர்கள் அதை உறுதிப்படுத்தினர். அதேபோல, திரிணமூல் காங்கிரஸாக்கு எதிராக வாக்களிக்கக் கூடியவர்கள் தடுக்கப்பட்டனர் என்பதைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

மாநிலம் தழுவிய அளவில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவே நேரடியாகக் களமிறங்கி ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் பொறுப்பாளரை நியமித்தார். பாஜக தொண்டர்கள் அனைவரும் முற்பகல் 11 மணிக்குள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும், அதன் பிறகு அனைவரும் வாக்காளர்களை அதிக அளவில் வாக்களிக்கச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் அவர் இட்டிருந்த கட்டளை.

அமித் ஷா வாக்குச்சாவடி அளவிலான தரவுகளைச் சரிபார்த்தது மட்டுமல்லாமல், மாவட்ட ரீதியாக தலைவர்களைத் தொடர்ந்து சந்தித்து அவர்களிடமிருந்து பெறப்படும் தகவல்கள் அடிப்படையில் தொகுதி வாரியான தேர்தல் உத்தியை முன்னெடுத்தார்.

எந்தவொரு தொகுதியும் அவர் பார்வையிலிருந்து விடுபடவில்லை. ஒவ்வொரு தொகுதியிலும் மம்தா பானர்ஜி போட்டியிடுவதாகக் கருதி அதற்கான உத்தி கையிலெடுக்கப்பட்டது.

உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வாக்குச்சாவடி வாரியான திட்டமிடல் மட்டுமல்லாமல், ராணுவ ரீதியிலான கட்டுப்பாட்டுடன் தொண்டர்கள் தயார்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டனர். உள்ளூர் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இதற்கு முன்பு மேற்கு வங்கம் சந்திக்காத அளவில் கட்சிக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டது. அதைப் பார்த்து தேர்தல் உத்தியிலும் உட்கட்சி கட்டமைப்பிலும் தேர்ந்த இடதுசாரிகளே வியப்பில் சமைந்தனர் என்று சொல்லப்படுகிறது.

அத்துடன் நின்றுவிடவில்லை அமித் ஷாவின்



முனைப்பு. அமைதியாக சமூகக் கூட்டணிகளை ஆங்காங்கே உருவாக்கினார். பட்டியலினத்தினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட சில பிரிவினர் ஆகியோருக்கு மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் மீது ஏற்பட்டிருந்த அதிருப்தியைப் பயன்படுத்தி பாஜகவின் செல்வாக்கை அதிகரிக்க முற்பட்டது அவரது சாதுர்யம். தொகுதிவாரியாக உள்ளூர் பிரச்னைகள், வருத்தங்கள் கோரிக்கைகள் பட்டியலிடப்பட்டு அதனடிப்படையில் பாஜகவின் தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

'வங்காளிகளின் கௌரவம்' என்கிற முழக்கத்தை முன்வைத்து திரிணமூல் பிரசாரம் செய்தபோது, மம்தா ஆட்சியில் சட்ட விரோதமாக ஊடுருவும் வங்கதேச ஊடுருவல்காரர்களால் மேற்கு வங்கத்தின் மக்கள்தொகை பகுப்பு மாற்றம் காண்கிறது என்கிற பரப்புரையை முன்வைத்ததும் பாஜகவின் வெற்றிக்கு முக்கியமான காரணம். பாஜகவின் மேற்குவங்க வெற்றி, உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் துல்லியமான தேர்தல் உத்திக்கு கிடைத்திருக்கும் வெற்றி.





# கலைக்கப்பட்ட அரசுகள்; சிறைக்குச் சென்ற முதல்வர்... தமிழ்நாடு சட்டசபையின் கடந்தகால ஹைலைட்ஸ்!

பதினேழாவது சட்டசபை அமைந்துள்ள நிலையில், கடந்த காலங்களில் தமிழக சட்டசபையில் நிகழ்ந்த சில ஹைலைட்ஸ்!

பதினேழாவது சட்டசபையில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் தவெக, இன்று தனது பெரும்பான்மையை நிரூபித்துள்ளது. இந்தச் சூழலில் கடந்த பதினாறு சட்டமன்ற நிகழ்வுகளின்போது நடந்த சில முக்கிய சம்பவங்களைத் திரும்பிப் பார்க்கலாம்.

எந்தெந்தக் கட்சிகள் எந்தெந்த தேர்தல்களில் வென்று எத்தனை முறை தமிழகத்தை ஆட்சி செய்தன என்று பார்க்கலாமா?

காங்கிரஸ் நாடு சுதந்திரம் அடைந்தது முதல் தொடர்ச்சியான மூன்று ஆட்சிக் காலங்கள் (1952, 57, மற்றும் 1962 தேர்தல்கள்)

தி.மு.க 1967, 1971,1989, 1996, 2006, 2021

அ.இ.அ.தி.மு.க 1977, 1980, 1984, 1991, 2001, 2011, 2016

தவெக 2026

காங்கிரஸ் ஆட்சியில் ராஜாஜி, காமராஜர் அவருக்குப் பின் பக்தவச்சலம் ஆகியோர் முதல்வர்களாக இருந்தனர்.

திமுக ஆட்சி செய்த காலங்களில் சி.என்.அண்ணாதுரை, கருணாநிதி அவருக்குப் பிறகு மு.க.ஸ்டாலின் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தனர். கருணாநிதி முதல்வராக இருந்த ஒரு சமயத்தில் ஸ்டாலின் துணை முதல்வராகவும்... ஸ்டாலின் முதல்வராகப் பதவி வகித்த கடந்த ஆட்சியில் உதயநிதி துணை முதல்வராகவும் இருந்துள்ளனர்.

அதிமுக ஆட்சியில் எம்.ஜி.ஆர், அவருக்குப் பின் சில மாதங்கள் அவர் மனைவி ஜானகி, தொடர்ந்து ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் முதல்வர் பதவியை அலங்கரித்தனர். பழனிசாமி முதல்வராக இருந்த போது துணை முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவி வகித்தார்.

தமிழக அரசியல் வரலாற்றில் சமீப காலமாகத்தான் ஆட்சிக் கலைப்பு, குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற வார்த்தைகளெல்லாம் விடை பெற்றிருக்கின்றன.

ஆனால் திராவிடக் கட்சிகளின் ஆட்சி தொடங்கிய புதிதில் ஆட்சிக் கலைப்பு அஸ்திரத்தை அவ்வப்போது எடுத்திருக்கிறது மத்திய அரசு.

திமுக ஆட்சி இரு முறையும், அதிமுக ஆட்சி இரு முறையும் கலைக்கப்பட்டிருக்கிறது.

1971ம் ஆண்டு தேர்தலில் வென்று முதல்வராக இருந்தார் கருணாநிதி. அவரது ஆட்சிக்காலம் முடிவடைய சில மாதங்களே இருந்த நிலையில் அந்த அரசு கலைக்கப்பட்டது. காரணமாக சர்காரியா ஊழல் விவகாரத்தைச் சொன்னது மத்திய அரசு,. திமுகவினரோ நெருக்கடி நிலைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்காததனாலேயே கலைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். கலைப்புக்குப் பின் நடந்த 77 தேர்தலில் திமுக வெற்றி பெறவில்லை.

அடுத்து 1989 தேர்தலில் வென்று இரண்டு ஆண்டுகள் பதவி வகித்த நிலையில் 1991ம்

ஆண்டு கலைக்கப்பட்டது. ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தந்ததாகவும் சட்டம் ஒழுங்கு சரியில்லை எனவும் சொல்லி கலைக்க பரிந்துரைத்தது அப்போதைய பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசு. கலைப்புக்குப் பிறகு நடந்த 91 தேர்தலிலும் ராஜீவ் அனுதாப அலை வீச, திமுகவால் வெற்றி பெற முடியவில்லை.

அதிமுக அரசு 1980ம் ஆண்டு முதன் முதலாக கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவுடன் கூட்டணி சேர்ந்து வென்றிருந்த இந்திரா காந்தி, தோல்வியடைந்த கட்சிகள் ஆள்கின்ற தகுதியை இழந்து விட்டன எனச் சொல்லி கலைத்தார். ஆனால் திமுக தூண்டுதலாலேயே கலைக்கப்பட்டதாகக் கூறினர் அதிமுகவினர். பிறகு நடந்த தேர்தில் மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டது அதிமுக. திரும்ப 1988 ல் ஜானகி ராமச்சந்திரன் முதல்வராக இருந்த போது கலைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின் ஜெ., ஜா என இரு அணிகளாகப் பிளவு பட சட்டமன்றத்தில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்தி சட்டபையைக் கலைத்தது மத்திய அரசு.

காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்திய அண்ணா ஒரு பதவிக்காலம் கூட முழுமையாக பதவி வகிக்காமலேயே மறைந்து விட்டார்.

கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகள் திமுக தலைவராக இருந்த கருணாநிதி, இரண்டு முறைதான் பதவிக்காலத்தை முழுவதுமாக ஆட்சி செய்திருக்கிறார். அதில் ஒரு ஐந்தாண்டு தனி மெஜாரிட்டி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா தனி மெஜாரிட்டியுடன் முழுப் பதவிக் காலத்தையும் ஆண்ட முதல் முதல்வர் என்ற பெருமை இவருக்குண்டு. அதேபோல் சிறைத் தண்டனை மூலம் முதல்வர் பதவி இழந்த முதல் முதல்வரும் இவரே!

1989 ம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா திமுகவினர் சட்டப்பேரவைக்குள் தன்னைத் தாக்கி தன் சேலையைப் பிடித்து இழுத்ததாக பேட்டி தந்தார். முதல்வராக இருந்த கருணாநிதியின் கையில் இருந்த பட்ஜெட் நகலை கிழிக்க முயன்றனர் என அதிமுகவினரைக் நோக்கிக் கைகாட்டினர் திமுகவினர்.

2017ம் ஆண்டு பழனிசாமி தலைமையிலான ஆட்சியின் நம்பிக்கை கோரும் தீர்மானத்தின்போது திமுகவின் கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்ததைத் தொடர்ந்து எழுந்த சலசலப்பின்போது, தனது சட்டை கிழிக்கப்பட்டதாக பனியனுடன் மீடியா முன் வந்து பேசினார் மு.க.ஸ்டாலின்.

தமிழக தேர்தல் வரலாற்றில் இதற்கு முன் இரண்டு முறை யாருக்கும் பெரும்பான்மை



கிடைக்காத ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது.

முதல் முறையாக 1952 ல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனால் அப்போது தமிழ்நாடு தனி மாநிலமாக இல்லாமல் சென்னை மாகாணமாக இருந்தது. அதிக இடங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சி வேறு சில கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்தது.

அதன்பிறகு 2006ம் ஆண்டு தேர்தலில் அதே சூழல் உருவானது. புதிதாக களம் கண்ட விஜயகாந்த் கணிசமான வாக்குகளைப் பிரிக்க, பதவியிலிருந்த அதிமுக ஆட்சியை இழக்க, ஆட்சியைக் கைப்பற்றிய திமுகவுக்கோ பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தார் கருணாநிதி. அதேநேரம் கடைசி வரை காங்கிரஸ் உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்க்கவே இல்லை. பெரும்பான்மையை நிரூபித்தே ஆட்சி நடந்தாலும் அந்த ஐந்து ஆண்டுகளும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா திமுகவை குறிப்பிடும் போதெல்லாம் `மைனாரிட்டி திமுக அரசு' என்றே சொல்லி வந்தார்.

மூன்றாவது முறையாக விஜய் முதல்வராகப் பதவி ஏற்றுள்ள இந்த தேர்தலில் பெரும்பான்மைக்குப் பத்து இடங்கள் தேவைப்பட்ட நிலையில், அவை கிடைக்காமல் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது புதிதாக களம் கண்ட தவெக. காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் சட்டசபையில் பெரும்பான்மையை நிருபித்துள்ளது தவெக.





# சின்னம்மா, டிடிவி தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும்'–எஸ்.பி.வேலுமணி உறுதி!

தமிழக சட்டமன்றத்தில் இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில், விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு ஆதரவாக 144 பேர் வாக்களித்திருந்தனர். இதில் அதிமுக எம்.எல்.ஏக்கள் இரண்டாகப் பிரிந்து, 25 பேர் தவெகவிற்கு ஆதரவாகவும், 22 பேர் எதிராகவும் வாக்களித்தனர். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, ``தவெகவிற்கு எதிராக வாக்களிக்க கொறடா உத்தரவிட்டும், சட்டத்தை மீறி 25 எம்.எல்.ஏக்கள் தவெகவிற்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளனர். 6 அமைச்சர் பதவிகள் மற்றும் 10 வாரியப் பதவிகள் தருவதாக ஆசை காட்டி அதிமுக எம்.எல்.ஏக்களை வளைத்திருக்கிறார்கள். பதவிக்கு ஆசைப்பட்ட சில முன்னாள் அமைச்சர்கள் இதில் மும்முரமாக இருக்கிறார்கள். கட்சிக்குத் துரோகம் செய்த 25 எம்.எல்.ஏக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." எனக் காட்டமாக விமர்சித்திருந்தார்.

அதற்கு எதிராக நாங்களும் 27ம் எம்.எல்.ஏக்களின் கையெழுத்து அடங்கிய கடிதத்தை கொடுத்திருக்கிறோம். எனவே, இந்த சிக்கலில் இன்னும் சபாநாயகர் தீர்வு காணவில்லை. இந்த நிலையில், அவர் எப்படி கொறடாவை நியமிக்க முடியும்? கொறடா என்பவர் தேர்வு செய்யப்படுபவரே தவிர நியமிக்கப்படுபவரல்ல. எனவே நாங்கள் யாரையும் ஏமாற்றவில்லை. பதவிக்கு நாங்கள் ஆசைப்பட்டதால்தான் இப்போது இருக்கும் சூழல் நிலவுவதாக குற்றம்சாட்டியிருக்கிறார். என்ன நடந்தது என்பதை சொல்லிவிடுகிறேன்.

மே 4ம் தேதி மாலை எனக்கு திமுகவின் முன்னாள் அமைச்சர்கள் இருவர் அழைத்து நல்ல அமைச்சர் பொறுப்பை கேட்டு வாங்குங்கள் எனப் பேசினார்கள். மறுநாள் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடியைச் சந்தித்தபோது, 'திமுக வெளியிலிருந்து ஆதரவளிப்பதாக கூறுகிறார்கள். திமுக கூட்டணியில் இருந்த கட்சிகளுக்கு மட்டும் அமைச்சரவையில் இடம் கொடுத்தால் போதுமாம். நான் டெல்லியில் பேசிவிட்டேன். அவர்களும் சம்மதம் தெரிவித்துவிட்டார்கள். நான் முதல்வர், நமக்கு 25 அமைச்சர்கள் கிடைப்பார்கள்' என்றார். நான் இதை தொண்டர்கள் எப்படி ஏற்பார்கள் என மறுத்தோம்.

இது விவாதக் களத்தில் இருந்தபோதே, விசிக தலைவர் திருமாவளவன் முதல்வர். அமைச்சரவையில் அதிமுக எனத் திமுக முன்மொழிந்தது. இந்த திட்டத்துக்கு சம்மதித்தோம். ஆனால், எடப்பாடி, `இது வேண்டாம். முதல்வர் என்றால் நான்தான். இல்லையென்றால் விசிக ஆட்சி என்றுதான் பேசுவார்கள். எனவே, நாம் எதிர்க்கட்சியாகவே இருந்துவிடுவோம்.' என்றார். நான் என் பிள்ளைகளின் தலையில் சத்தியம் செய்கிறேன்... நீங்களும் செய்வீர்களா? யாருக்கு பதவி ஆசை. தவெக திமுகவை தீய சக்தி எனக் கூறி, அதை அப்புறப்படுத்த முயற்சிக்கிறது.

இது அதிமுகவின் கொள்கைகளில் ஒன்று. அதனால், நாம் தவெகவை ஆதரிப்போம் எனக் கோரினோம். ஆனால், அவர் அதை மறுத்தார். இதில்தான் எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதுதான் இப்போதுவரை நடந்த உண்மை." என்றார்.

தொடர்ந்து பேசிய எஸ்.பி.வேலுமணி, ``தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியை சந்தித்து வருகிறோம். இதை ஆய்வு செய்ய வேண்டும் எனக் கேட்கிறோம். கட்சியை உடைக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. எடப்பாடிதான் இப்போது பொதுச் செயலாளர் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. சின்னம்மாதான் இவரை முதல்வராக்கினார்.

ஆனால், சின்னம்மா, டிடிவி தினகரன், ஓ.பி.எஸ், ஜே.சி.டி பிரபாகரன், செங்கோட்டையன் என ஒவ்வொருவராக கட்சியிலிருந்து வெளியேற்றிக்கொண்டே இருந்தால் கட்சி எப்படி இருக்கும். எனவே, சின்னம்மா, டிடிவி தினகரன் என அனைவரையும் மீண்டும் கட்சிக்குள் இணைத்து ஒருங்கிணைக்க வேண்டும். இருப்பவர்கள் மீது குறைசொல்லி யாரையும் வெளியே அனுப்பாதீர்கள். இனியாவது எல்லோரையும் அரவணைத்து கட்சியைப் பலப்படுத்த வேண்டும்." என்றார்.

தமிழ்நாட்டில் பாஜகவின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருப்பவர் அண்ணாமலை. அவர் பாஜகவில் இருந்து விலகி, புதிய கட்சியைத் தொடங்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வந்தது. இதற்கிடையே இன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலையிடம் இது தொடர்பாகச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இருப்பினும்,



# புதிய கட்சி தொடங்கும் அண்ணாமலை? கடைசி வரை மறுப்பே சொல்லல பாருங்க..

அதற்கு அண்ணாமலை எந்தவொரு மறுப்பும் தெரிவிக்கவில்லை.

தமிழக பாஜகவில் மிக முக்கியமான முகமாக இருந்தவர் அண்ணாமலை. கர்நாடகாவில் ஐபிஎஸ் அதிகாரியாக இருந்த அண்ணாமலை, அதை விட்டுவிட்டு அரசியலுக்கு வந்தார். முதலில் ரஜினிகாந்த் தொடங்கும் அரசியல் கட்சியில் அண்ணாமலை இணைவார் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், ரஜினி கட்சி தொடங்காததால் அண்ணாமலை தனது திட்டத்தை மாற்றினார்.

2021 சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு, தமிழக பாஜக மாநிலத் தலைவராக இருந்த எல் முருகனுக்கு பதிலாக அண்ணாமலை புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவரே மாநிலத் தலைவராகச் செயல்பட்டார். வேல் யாத்திரை தொடங்கி பாஜகவை மாநிலத்தில் வளர்க்கப் பல்வேறு முயற்சிகளை எடுத்தார். 2024 லோக்சபா தேர்தலிலும் அதிமுகவை விட்டு தனியாகக் கூட்டணி அமைத்ததில் அண்ணாமலைக்கு முக்கியமான பங்கு இருக்கிறது.



இந்தச் சூழலில் தான் 2025ல் அவர் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக நயினார் நாகேந்திரன் தலைமை பொறுப்பிற்குக் கொண்டு வரப்பட்டார். அதன் பிறகு அண்ணாமலைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை எனச் சொல்லப்படுகிறது. அதிமுக உடன் பாஜக அமைத்த நிலையில், அதற்கு அண்ணாமலை எதிர்ப்பு தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இருப்பினும், பொதுவெளியில் அண்ணாமலை எதுவும் சொல்லாமலேயே இருந்தார்.

இதற்கிடையே தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணி படுதோல்வி அடைந்தது. பாஜக ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றது. இதையடுத்து அண்ணாமலை புதிய கட்சியைத் தொடங்கலாம் என்று தகவல்கள் வெளியானது. கடந்த சில வாரங்களாகவே இந்த தகவல்கள் தொடர்ந்து வெளியாகி வந்தது. அதேபோல அண்ணாமலை தரப்பில் இருந்து இதற்கு மறுப்பு வரவில்லை. மவுனமாகவே இருந்தனர்.

இந்தச் சூழலில் தான் இன்று திடீர் பயணமாக அண்ணாமலை டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றார். அப்போது சென்னை விமான நிலையத்தில் அண்ணாமலையை செய்தியாளர்கள் சூழ்ந்தனர். புதிய கட்சி தொடங்குகிறீர்களா என்ற கேள்வி கேட்கப்பட்டபோது, அண்ணாமலை அதற்கு எந்தவொரு மறுப்பும் தெரிவிக்கவில்லை. வெறுமன, "இப்போது பேசினால் சரியாக இருக்காது.. எல்லாக் கேள்விகளுக்கும் 2 நாட்களில் பதில் சொல்கிறேன்" என்று மட்டும் பதிலளித்தார்.

செய்தியாளர்கள் பல முறை கேட்ட போதிலும், அண்ணாமலை புதிய கட்சி தொடங்குவது குறித்து எந்தவொரு கருத்தும் கூறவில்லை. மேலும், குறிப்பாக அவர் எந்தவொரு மறுப்பையும் தெரிவிக்கவில்லை. இதனால் அவர் கட்சி தொடங்குவது கிட்டத்தட்ட உறுதி என்றே நெட்டிசன்கள் கூறி வருகிறார்கள்.

மேலும், அண்ணாமலை வழக்கமாக பாஜக கொடி இருக்கும் காரிலேயே பயணிப்பார். ஆனால், இந்த முறை அண்ணாமலை பயணித்த காரில் பாஜகவின் கொடி இல்லை என்றும் கூறப்படுகிறது.



# தூது அனுப்பிய எடப்பாடி; பிடிகொடுக்காத சிவி சண்முகம், எஸ்.பி வேலுமணி' 60% VS 40%- உடைகிறதா அதிமுக?

அ.தி.மு.கவில் தலைமைக்கு எதிராக முன்னணித் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள சம்பவம் தமிழ்நாட்டு அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடினை தொடர்ந்து, முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம் மற்றும் எஸ்.பி. வேலுமணி ஆகியோர் தனி அணியாகச் செயல்படத் தொடங்கியுள்ளது கட்சி வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் மற்றும் முன்னணித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் முதல்வராகப் பொறுப்பேற்றதற்கு ஆதரவு தெரிவிப்பது மற்றும் சட்டமன்றக் குழுத் தலைமைப் பொறுப்புகள் தொடர்பாகக் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. எடப்பாடியின் சில முடிவுகளில் சி.வி. சண்முகம் மற்றும் வேலுமணி தரப்பு முரண்பட்டு, கூட்டத்தைப் புறக்கணித்து வெளியேறினர் என்ற தகவல்கள் வெளியானது.

இபிஎஸ் இல்லத்திலிருந்து வெளியேறிய சி.வி.சண்முகம் மற்றும் வேலுமணி தரப்பினர், சென்னை எம்.ஆர்.சி நகர் பகுதியில் உள்ள அலுவலகத்தில் தனி ஆலோசனையில் ஈடுபட்டனர். இதில் சுமார் 38 எம்.எல்.ஏக்கள் மற்றும் சில மாவட்டச் செயலாளர்கள் இதில் கலந்து கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக் கூட்டத்தில் சட்டமன்றக் குழுத் தலைவராக எஸ்.பி. வேலுமணியையும், துணைத் தலைவராக சி.வி. சண்முகத்தையும் நியமிக்கக் கோரி 38 எம்.எல்.ஏக்களின் கையெழுத்து அடங்கிய கடிதம் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, அ.தி.மு.க நிர்வாகிகள் மற்றும் எம்.எல்.ஏக்களில் சுமார் 60% பேர் சி.வி. சண்முகம் பக்கமும், 40% பேர் எடப்பாடி பழனிசாமி பக்கமும் இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

நிலைமை கையை மீறிச் செல்வதை உணர்ந்த எடப்பாடி பழனிசாமி, சேலம் இளங்கோவன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தளவாய் சுந்தரம், ஆர்.பி. உதயகுமார் ஆகிய 5 பேர் கொண்ட குழுவைச் சமாதானம் பேச அனுப்பி வைத்தார். "சி.வி.சண்முகம் சொல்வதை நான் கேட்கத் தயார்" என இபிஎஸ் இறங்கி வந்த போதிலும், அதிருப்தி தரப்பினர் அதனை ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.



# சிவி சண்முகம் தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் தனித்து ஆலோசனை-அதிமுகவில் பரபரப்பு!



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தவெகவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தன. விசிகவின் நிலைப்பாட்டை இன்னும் சற்று நேரத்தில் திருமாவளவன் அறிவிக்கிறார்.

தமிழக அரசியலில் தற்போது பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. தவெக தனிப்பெரும் கட்சியாக சட்டமன்றத் தேர்தலில் வென்றிருந்தாலும், பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்நிலையில், காங்கிரஸ் தவெகவிற்கு ஆதரவளிப்பதாகக் கடந்த சில தினங்களுக்கு முன்பு தெரிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தவெகவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தன. விசிகவின் நிலைப்பாட்டை இன்னும் சற்று நேரத்தில் திருமாவளவன் அறிவிக்கிறார்.

மற்றொரு பக்கம், திமுக ஆதரவோடும் அதிமுக ஆட்சியமைக்கப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும் பேசப்பட்டு வருகிறது.

அத்துடன், அதிமுகவிலிருந்து சிலர் தவெகவிற்கு ஆதரவளிக்கும் மனநிலையில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

கடந்த சில தினங்களாக, அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சி எம்.எல்.ஏக்கள் புதுச்சேரியிலுள்ள ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இன்று காலை அவர்கள் அனைவரும் சென்னை வந்தனர். அதனைத் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்.எல்.ஏக்கள் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது சி.வி. சண்முகம் தலைமையில், அவருடைய இல்லத்தில் அதிமுகவின் 36 எம்.எல்.ஏக்கள் தனித்து ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார்கள். எஸ்.பி. வேலுமணி, சி. விஜயபாஸ்கர், லீமா ரோஸ் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதனால் அதிமுகவில் பரபரப்பு நிலவி வருகிறது. அதிமுக எம்.எல்.ஏக்கள் சிலரும் தவெகவிற்கு ஆதரவளிக்கலாம் என்கிற பேச்சுகளும் தற்போது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில், சென்னையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை எடப்பாடி பழனிசாமி அவசரமாகக் கூட்டியுள்ளார். நள்ளிரவில் தகவல் தெரிவிக்கப்பட்டதால் சென்னை மற்றும் சுற்றுவட்டார நிர்வாகிகள் இதில் பங்கேற்கின்றனர்.

ஒருவேளை சி.வி. சண்முகம் மற்றும் வேலுமணி தரப்பினர் முறைப்படி முதல்வர் விஜய்யைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தால், அவர்களைக் கட்சியிலிருந்து நீக்க எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கசிகின்றன. அ.தி.மு.கவின் இரண்டு துருவங்களாக இருந்த தலைவர்களே தற்போது தலைமைக்கு எதிராகத் திரும்பியுள்ளது அக்கட்சியினரிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அ.தி.மு.கவில் தலைமைப் பதவி மற்றும் கொள்கை முடிவுகளில் ஏற்பட்ட மோதலால் கட்சி உடையும் நிலையில் உள்ளது. சி.வி. சண்முகம் வேலுமணி கூட்டணி 38 எம்.எல்.ஏக்களைத் தன்வசம் வைத்துள்ளதால் எடப்பாடி பழனிசாமியின் தலைமைக்குச் சிக்கல் உருவாகியுள்ளது. இன்று நடைபெறும் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவே அ.தி.மு.கவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்பது குறிப்பிடதக்கது.



# களம் மாறிய அரசியல்... தடம் புரளும் அதிமுக; EPS-க்கு 'செக்'; எம்.ஜி.ஆர் மாளிகையில் என்ன சலசலப்பு?

அ.தி.மு.கவில் தலைமைக்கு எதிராக முன்னணித் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள சம்பவம் தமிழ்நாட்டு அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடினைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம் மற்றும் எஸ்.பி. வேலுமணி ஆகியோர் தனி அணியாகச் செயல்படத் தொடங்கியுள்ளது கட்சி வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சனிக்கிழமை இபிஎஸ் இல்லத்தில் நடந்த கூட்டத்தில், தவெக தலைவர் விஜய் முதல்வராகப் பொறுப்பேற்றதற்கு ஆதரவு தெரிவிப்பது மற்றும் சட்டமன்றப் பொறுப்புகள் குறித்து கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சி.வி. சண்முகம் மற்றும் எஸ்.பி. வேலுமணி ஆகியோர் கூட்டத்தைப் புறக்கணித்து வெளியேறினர்.

வெளியேறிய தலைவர்கள் 38 எம்.எல்.ஏக் களுடன் தனியாக ஆலோசனையில் ஈடுபட்டனர். சட்டமன்றக் குழுத் தலைவராக எஸ்.பி. வேலுமணியையும், துணைத் தலைவராக சி.வி. சண்முகத்தையும் நியமிக்கக் கோரி கையெழுத்து வேட்டை நடந்ததாகக் கூறப்படுகிறது. தற்போது சுமார் 60% நிர்வாகிகள் சி.வி. சண்முகம் பக்கமும், 40% பேர் மட்டுமே இபிஎஸ் பக்கமும் இருப்பதாகக் கணிக்கப்படுகிறது.

38 எம்.எல்.ஏக்கள் அதிருப்தி அணியில் இருப்பதால் இபிஎஸ்ஸின் தலைமைக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த இபிஎஸ் அனுப்பிய 5 பேர் கொண்ட தூதுக்குழுவின் சமாதானப் பேச்சை அதிருப்தி தரப்பினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

நேற்று அவசரமாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை இபிஎஸ் கூட்டியுள்ளார். ஒருவேளை அதிருப்தி தலைவர்கள் முதலமைச்சர் விஜய்யைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தால், அவர்களைக் கட்சி யிலிருந்து நீக்கவும் இபிஎஸ் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில் இன்று தவெக முதல்வர் விஜய் தலைமையிலான முதல் சட்டமன்றக் கூட்டம் தொடங்கியது. இந்தச் சட்டமன்றக் கூட்டத்துக்கு அ.தி.மு.கவினர் ஒரே அணியாக வராமல் தனித்தனி குழுக்களாக வந்தனர். முதலில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஒரு குழுவும், பின்னர் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு குழுவும் வந்தன. எஸ்.பி. வேலுமணி குழுவினர் சி.வி. சண்முகத்திற்காகக் காத்திருந்துவிட்டுப் பின்னர் அவைக்குள் சென்றனர்.

சபாநாயகர் பதவிப்பிரமாணம் செய்து வைக்கும் நிகழ்வு தொடங்கிய பின்னரே சி.வி. சண்முகம் அவைக்கு வந்தார். அதிமுகவில் உட்கட்சிப் பூசல் நிலவி வரும் நிலையில், சட்டமன்றத்திலேயே எம்.எல்.ஏக்கள் இப்படித் தனித்தனி குழுக்களாகச் செயல்பட்டது கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்தது.

மேலும், தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் தொடங்கிய நிலையில், எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க சட்டமன்றக் குழுத் தலைவராக நியமிக்க வேண்டும் என 17எம்.எல்.ஏக்கள் மட்டுமே விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த விவகாரம் அரசியல் களத்தில் மீண்டும் அ.தி.மு.க பேசுபொருளாகியிருக்கிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரிக்க ஊடகவியலாளர் ஷபீர் அகமதிடம் பேசினோம். அவர், ``2021 தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.கவிற்கு இந்தத் தேர்தல் ஒரு 'வாழ்வா சாவா' போராட்டமாக அமைந்தது. எடப்பாடி பழனிசாமி ஒரு வருடத்திற்கு முன்பே தீவிரப் பிரசாரத்தைத் தொடங்கினாலும், களத்தில் மக்களிடம் பெரிய அளவிலான வரவேற்போ அல்லது எழுச்சியோ ஏற்படவில்லை.

குறிப்பாக, பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்ததும், பின்னர் விஜய்யின் அரசியல் வருகையால் ஏற்பட்ட தாக்கமும் அ.தி.மு.கவின் வாக்குகளைப் பாதித்துள்ளன. தி.மு.கவிற்கு மாற்றாக மக்கள் அ.தி.மு.கவை இந்தப் பொதுத்தேர்தலில் பார்க்கத் தவறிவிட்டனர் என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அ.தி.மு.கவில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவுக்கு முக்கியமான காரணம், கட்சியின் அனைத்து முடிவுகளையும் இபிஎஸ் ஒருவரே எடுப்பதாகும். கட்சியின் முகங்களாக அறியப்பட்ட எஸ்.பி. வேலுமணி, விஜயபாஸ்கர், சி.வி சண்முகம் போன்ற செல்வாக்கு மிக்க தலைவர்களுக்குப் பிரசாரத்திலோ அல்லது முடிவெடுப்பதிலோ போதிய சுதந்திரம் வழங்கப்படவில்லை.

மேலும், நிர்வாகிகள் சொன்ன கள யதார்த்தத்தை ஏற்காமல், "நாம்தான் ஜெயிக்கிறோம்" என்ற பிடிவாதமான போக்கை இபிஎஸ் கடைபிடித்தது தலைவர்களிடையே கோபத்தையும் வெறுப்பையும் உண்டாக்கியுள்ளது.

அ.தி.மு.கவின் பலமான கோட்டையாகக் கருதப்பட்ட மேற்கு மண்டலத்திலேயே (கொங்கு பகுதி) இந்த முறை மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. எஸ்.பி. வேலுமணி போன்ற 'ஸ்ட்ராங் மேன்' பிம்பம் கொண்ட தலைவர்களின் தொகுதிகளிலேயே இழுபறி நிலை உருவானது, அவர்களின் செல்வாக்கை கேள்விக்குறியாக்கியுள்ளது.

பா.ம.க கூட்டணியால் வட மாவட்டங்களில் ஓரளவு தொகுதிகளைத் தக்கவைக்க முடிந்தாலும், ஒட்டுமொத்தமாக கட்சி பலவீனமடைந்துள்ளது எம்.எல்.ஏக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி போன்றவர்கள் தனிக் கோணங்களில் செயல்படுவது, இபிஎஸ் தலைமையிலான அதிகாரத்தைச் சவால் செய்வதற்கே ஆகும். இவர்கள் சட்டமன்றத்தில் ஒரு தனி அணியாகச் செயல்படவும் வாய்ப்புள்ளது. அதே சமயம், ஆளுங்கட்சியுடன் ஒரு இணக்கமான போக்கை கடைபிடிப்பதன் மூலம், தங்களுக்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைகள் அல்லது காவல்துறை



அழுத்தங்களிலிருந்து தப்பிக்க இவர்கள் முயலலாம் என்ற சந்தேகமும் நிலவுகிறது.

இதனால், வரும் காலங்களில் கட்சி அலுவலகக் கைப்பற்றல், வங்கிக் கணக்கு விவகாரங்கள் என அ.தி.மு.கவில் மீண்டும் ஒரு அதிகாரப் போட்டி அரங்கேறுவதற்கான சூழல் உருவாகியுள்ளது" என்றார்.

தொடர்ந்து பத்திரிகையாளர் சுபேரிடம் பேசினோம். அவர், ``அ.தி.மு.கவில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு என்பது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு திடீரென உருவானதல்ல. அது ஏற்கனவே கட்சிக்குள் புகைந்து கொண்டிருந்த ஒன்றுதான். குறிப்பாக, பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்த முடிவே அக்கட்சியின் பல முக்கிய நிர்வாகிகள் வெளியேறக் காரணமாக அமைந்தது.

2019 மற்றும் 2021 தேர்தல்களில் தோல்வியைத் தழுவிய பின்னரும், தொண்டர்களின் விருப்பத்திற்கு மாறாக மீண்டும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. தமிழகத்தின் 'மதச்சார்பற்ற அரசியல்' என்ற எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவின் பார்முலாவை இபிஎஸ் தலைமையிலான அ.தி.மு.க கைவிட்டதே இந்த அதிருப்திக்கு அடிப்படை.

தேர்தலுக்கு முன்னதாகவே தவெக தலைவர் விஜய்யுடன் அ.தி.மு.க பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அதில் ஆட்சிப் பகிர்வு (முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் பதவி காலப் பகிர்வு) குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியானது. ஆனால், ஏதோ ஒரு அழுத்தத்தின் காரணமாக அ.தி.மு.க மீண்டும் பாஜகவுடன் கைகோர்த்தது.

இந்தத் தவறான கூட்டணி முடிவால், பல தொகுதிகளில் அ.தி.மு.க டெபாசிட் இழந்து மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இது அக்கட்சி எம்.எல்.ஏக்களிடையே ஒரு பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது எஸ்.பி. வேலுமணி, சி.வி. சண்முகம் தலைமையிலான ஒரு குழுவினர், விஜய்யின் தவெகவிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது. ஆனால்,

PRGI No.TNTAM/25/A4806
JIO NEWSTAMIL
மாதம் இருமுறை இதழ்
Volume: 01 | Issue: 07 | 2026,June 01-15 | Rs. 20/-

ஆசிரியர் - வெளியீட்டாளர்
மோ.உதயசிங்

செய்தி ஆசிரியர்
தமிழன்ராஜா

நிர்வாக ஆசிரியர்
நா.பாண்டிமீனா

மேலாண்மை நிர்வாகி
உ.விக்னேஷ்

பொது மேலாளர்
ஹரிபிரசன்னா

துணை ஆசிரியர்
மனோஜ் கோபால் கண்ணன்

நிருபர்கள்
மோதி- தூத்துக்குடி
மீனாட்சிசுந்தரம்- தூத்துக்குடி
லாகேஷ்- நாகர்கோயில்

புகைப்படக்கலைஞர்
செந்தில்

வடிவமைப்பு:
எஸ்.மீடியா-அக்னி சிவமூர்த்தி

நிர்வாக அலுவலகம் :
ஜியோ நியூஸ் தமிழ்
4/1182, அன்னை அபிராமி
தெரு, தாசில்தார் நகர்,
மதுரை- 625020

அலைபேசி : 93210 93217
மின்னஞ்சல் :
jionewstamil@gmail.com
இணையதளம்
jionewstamil.com



பா.ஜ.க கூட்டணியில் வெற்றி பெற்றவர்களை நேரடியாகச் சேர்த்துக் கொள்ள விஜய் தரப்பு தயக்கம் காட்டுவதாகவும், விருப்பமுள்ளவர்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 'விசில்' சின்னத்தில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்று வர வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதாகவும் கூறப்படுகிறது.

இபிஎஸ் தன்னை மட்டுமே முன்னிலைப்படுத்திக் கொண்டு மற்ற தலைவர்களை முடக்கியதும் இந்த அதிருப்திக்கு ஒரு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது.

விஜய்யின் அரசியல் வருகையை இரு திராவிடக் கட்சிகளுமே மிகக் குறைவாக மதிப்பிட்டுவிட்டன. 2016 க்குப் பிறகு தமிழக அரசியலில் ஏற்பட்ட தலைமுறை இடைவெளியை விஜய் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். திராவிடக் கட்சிகள் இன்னும் பழைய பாணி அரசியல், அடுக்குமொழிப் பேச்சுகள் மற்றும் காசு கொடுத்துக் கூட்டத்தைக் கூட்டுவது போன்றவற்றையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இன்றைய இளைஞர்களுக்குத் தேவையான வேகமான மற்றும் எளிமையான அரசியலை விஜய் வழங்கியுள்ளார். அரசியல் வறட்சி நிலவிய நேரத்தில், மக்கள் விஜய்யை ஒரு மாற்றாகப் பார்க்கத் தொடங்கிவிட்டனர் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன" என்றார்.

Owned, Published and Printed by M.UDHAYA SINGH. Printed at SUNDARARAJA PRINTERS 25B, R.M.S. COLONY, 4TH CROSS ST., MUTHUPATTI, MADURAI– 625003 and Published from. No 1078-1, Selva Vinayagar Kovil Street, Yagappa Nagar, Madurai – 625020. Editor: M.UDHAYA SINGH




மதுரை மாவட்டத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் அதிக மதிப்பெண் பெற்ற வாரிசுகளுக்கு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள். காவல்துறையில் பணியாற்றி வரும் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளின் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதன் படி 20242025 ஆம் ஆண்டிற்கான கல்வி ஆண்டில் மதுரை மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு சிறப்பு கல்வித் உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி இன்று (23.05.2026) காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஙி.ரி.அரவிந்த் அவர்கள் வழங்கி மாணவர்களு வாழ்த்து தெரிவித்தார். மேலும் எதிர்காலத்தில் இதேபோன்று சிறப்பாக கல்வியில் சாதித்து முன்னேற வேண்டும் என அறிவுரை வழங்கி பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,பழநி

## நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சி நிலையம்

**முழு நேரம் பயிற்சி - ஊக்கத்தொகை மாதம் ரூ.10,000/-**

| | நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சிக்கான தகுதிகள் | பயிற்சி காலம் |
|---|---|---|
| 1) | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் | 3 ஆண்டுகள் (பயிற்சி நிலையத்தில் தங்கிப் பயில வேண்டும்) |
| 2) | இந்து மத சம்பிரதாயத்தை பின்பற்றும் நபர்கள் | |
| 3) | 13 வயது முதல் 16 வயதுக்குள் இருக்க வேண்டும் | |

உணவு,உடை,தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி
திருக்கோயில் மூலம் கட்டணமில்லாமல் வழங்கப்படும்

தொடர்புக்கு : தவில் ஆசிரியர் - திரு.மணிகண்டன்- 9443616500
தொலைபேசி எண்கள் : 04545-240293, 04545- 241293

திருக்கோயில் இணையதள முகவரி : www.palanimurugan.hrce.tn.gov.in
திருக்கோயில் மின்னஞ்சல் முகவரி : jceomdu_32203.hrce@tn.gov.in